# திராவிடநாடு

1—9—57 | வார வெளியீடு | விலை 0—2—6


# வேறென்ன வேலையாம்?

[ இரா. பரமசிவம் ]

தோப்புப் பலாப்பழம் பழுத்ததடி! சென்று
சாப்பிட மந்திக்குச் சொன்னவரார்? இனக்
காப்போடு திராவிடர் நாம்ஒன்று சேராது
வேறென்ன வேலையாம் நம்ம வர்க்கே?

நல்லெழிற் பால்நிலா வந்ததடி! பொய்கை
நளிர்அல்லி சிரித்திடச் சொன்னவரார்? சுவை
வெல்லத் தமிழ்மொழி அரசாளச் செய்யாது
வேறென்ன வேலையாம் நம்ம வர்க்கே?

தோட்டத்தில் முல்லை மலர்ந்ததடி! பாடும்
தும்பியை மொய்த்திடச் சொன்னவரார்? சங்கம்
தீட்டிய இலக்கியம் ஏற்றிடச் செய்யாது
வேறென்ன வேலையாம் நம்ம வர்க்கே?

புட்கள் அதிகாலை எழுந்ததடி! தீனி
போய்த்தேடச் சொல்லி விடுத்தவரார்? ஆரிய
முட்கள் படர்ந்தநம் திராவிடம் மீட்காது
வேறென்ன வேலையாம் நம்ம வர்க்கே?

மலைவிட்டு அருவி இழிந்ததடி! ஓடி
மானைக்குதித்திடச் சொன்னவரார்? நீதி
குலையாத ஆட்சியாம் நமதாட்சி செய்யாது
வேறென்ன வேலையாம் நம்ம வர்க்கே?

# நாட்டியம் எனும் சொல்

ஆயிரக் கணக்கான யாண்டுகட்டு முன்னர் தமிழகம்போந்த ஆரியர் தமிழ் மக்களுடன் கலந்து வாழ்ந்து வரலாயினர். அக்காரணத்தால் ஆரியச் சொற்கள் பல தமிழில் புகுந்தன; தமிழ்ச் சொற்கள் பல ஆரிய மொழியுள் புகுந்தன. அங்ஙனம் புகுந்த சொற்களுள் நாட்டியம் என்னும் சொல்லும் ஒன்ருகும்.

வடமொழி நிகண்டு கூறுவது; தாண்டவம், நடனம், நாட்டிடம், லாஸ்யம், நிருத்யம், நர்த்தனம் என்னும் ஆறும் நாட்டியத்தைக் குறிக்கும் சொற்கள் என்பதை, வடமொழியில் அமரசிம்மன் செய்த நாமலிங்கானு சாசனம் என்னும் நிகண்டிலுள்ள, "தாண்டவம் நடநம் நாட்யம் லாஸ்யம் நிருத்யஞ்ச நர்த்தனம்"—(164) என்னும் சுலோகத்தால் நாம் அறிந்து கொள்ளுகின்ருேம். இங்கே, நாட்டியம் என்பது ஆட்டத்தை மட்டும் குறிக்கின்றது. இச்சுலோகத்தின் பின்னுள்ள "தௌர்ய திரிகம் நிருத்தக்கீத வாத்யம் நாட்ய மிதம் த்ரயம்"—(165) என்னும் சுலோகத்தால் தௌர்ய திரிகம், நாட்டியம் என்னுஞ் சொற்கள் நிருத்தம், கீதம், வாத்யம் என்னும் மூன்றுங் கூடியதற்குப் பெயரென்று உணர்ந்து கொள்ளுகின்ருேம். ஆகவே நாட்டியம் என்னும் சொல்லிற்கு ஆட்டம் என்றும், நிருத்தகீத வாத்யமென்கிற மூன்றுங் கூடியதென்றும் வடமொழியிற் பொருளிருத்தலை நாமலிங்கானு சாசனம் நமக்குத் தெளிவாக உணர்த்துகின்றது.

**சிலப்பதிகாரமும் அதன் உரையாசிரியரும்**

"பொன்னியல் பூங்கொடி
புரிந்துடன் வருத்தென
நாட்டிய நன்னூல்
நன்குகடைப் பிடித்துக்
காட்டின ளாதலின்"
(சிலப்பதிகாரம்—அர.)

என்னும் பகுதிக்கு "பொலிவினையுடைத்தொரு பொற்கொடியானது கூத்தாடினற்போல தாண்டவம், நிருத்தம், நாட்டியம் என்னும் மூன்று கூறுபாட்டினும் நாட்டியமென்பது புறநடத்தையாதலின், அதனை நூல்களிற் சொன்ன முறைமை வழுவாமல் அபிநயங் காட்டிப் பாவகந் தோன்ற விலக்குறுப்புப் பதினலின் வழுவாமல் ஆடிக் காட்டினளாதலின்" என்று அரும்பத உரையாசிரியர் எழுதிக் காட்டியுள்ளதால் அவ்வுரையிலிருந்து தாண்டவம் முதலான மூன்றும் ஒன்ருகாமல் வெவ்வேறு வகையவென்றும் அம்மூன்றுள் மூன்ருவது வகையைச் சார்ந்தது நாட்டியமென்றும், அது புறநடமென்றும் பெயர்பெறுமென்றும், அது பாவகந் தோன்ற அபிநயங் காட்டி ஆடப்படுவதென்றும் அறிந்து கொள்ளுகின்ருேம். பாவகம் என்பது உள்ளக் கருத்து. அக்கருத்து புறத்தார்க்குத் தோன்றும்படி மெய்ப்பாடு காட்டுவது அபிநயமாம்.

**நாட்டியமென்னுஞ் சொல்லின் பொருள்:** எனவே நாட்டியமென்னுஞ் சொற்கு ஆட்டம் என்பது பொருளா? நிருத்த கீத வாத்யமென்னும் மூன்றுங் கூடியதென்று பொருளா? அபிநயங்காட்டிப் பாவகம் தோன்ற ஆடப்பெறுவதென்று பொருளா? அச்சொல் எந்த வேரிலேயிருந்து தோன்றிற்று? என்று ஆராய்வோம்.

சேந்தன் திவாகரத்துள் பண்பு பற்றிய பெயர்த் தொகுதியுள் "நாட்டியங் குறிப்பே" என்ருெரு நூற்பா காணப்படுகின்றது. இந்நூற்பாவின்படி நாட்டியம் என்னும் சொல் மனக்குறிப்பை உணர்த்துவதாகும். மனக்குறிப்பை வடநூலார் பாவம் அல்லது பாவகம் என்று கூறுவர். பாவகமாகிய மனக் குறிப்பு அபிநயங்களால் புறந்தோன்றும்படி ஆடப்பெறுவதாகையால் அவ் ஆட்டத்திற்கு மனக்குறிப்பை உணர்த்தும் நாட்டியம் என்னும் சொல்லைப் பெயராக வழங்கினர்.

**நாட்டியமென்பது தமிழ்ச் சொல்:** இந்நாட்டியமென்னுஞ் சொல்லைப் பலரும் வடசொல்லென்றே கருதியுள்ளனர். இது வடசொல்லா தமிழ்ச் சொல்லா என்று ஆராயின் நாட்டம், நாடுதல் என்பவை புறத்தே கண் நோக்கத்தையும், அகத்தே மனநோக்கத்தையும். உணர்த்தி வருகின்ற தூய தமிழ்ச் சொல் ஆதலின், இவற்றின் பகுதியாகிய 'நாடு' என்பதிலிருந்தே 'நாட்டியம்' என்னுஞ் சொல் தோன்றியுள்ளதென்பது மொழி நூலறிஞருக்கு நன்கு விளங்கும். இந்நாட்டியம் என்பது வடமொழி புகுந்த தமிழ்ச் சொல் என்க.

தொல்காப்பியத்திலுள்ள மெய்ப்பாட்டியலின் மொழி பெயர்ப்பாக வடமொழியில் ஒரு நூலுண்டு. அந்நூலின் பெயர் நாட்டிய சாஸ்திரம் என்பதாகும். மெய்ப்பாடு மனக்குறிப்பால் தோன்றுவதாதலின் மனக்குறிப்பை உணர்த்தும் நாட்டியமென்னும் பெயராலேயே அந்நூலுக்குப் பெயர் அமைந்துள்ளதையுங் காண்க.

—'தமிழ்ப் பொழில்'


## திருவண்ணமலையில்!

வடாற்காடு மாவட்ட 3-வது தி. மு. க. மாநாடு — செப்டம்பர், 21, 22 தேதிகளில்

**முதல் நாள்: இந்தி எதிர்ப்பு மாநாடு**

**2-வது நாள்: தி. மு. க. மாநாடு**

ப. உ. சண்முகம் M.L.A.
மா. பா. சாரதி M.L.A.
செயலாளர்கள்.

முல்லைசக்தி,
வ. கு. தலைவர்.

# நங்கவரம்

16] ஆண்டு சந்தா ரூ. 8 [1—9—57] தனிப் பிரதி 16-காசு [இதழ் 7


கடந்த ஏழெட்டு தினங்களாக 'நங்கவரம்' நாட்டினர் கவனத்தையும் கருத்தையும் ஈர்த்திருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழக விவசாயச் சங்கத்தினர், பாடுபடும் பாட்டாளிகளின் குரலெழுப்பி, கோரிக்கைகளை நிறைவேற்ற மேற்கொண்ட அறப்போர், ஆளவந்தவர்களுக்கு அச்சத்தையும் அதிர்ச்சியையும் உண்டுபண்ணியிருக்கிறது. செல்லுமிடந்தோறும் காமராசரும் 'கனம்'களும், வழக்கமான முறையிலே, பல்லவிபாடுகிறுர்கள்! செல்வாக்குத் தேடுவதற்காக இந்தக் கிள்ர்ச்சி—என்கிருர்கள், 'செல்வாக்கு எங்கே கிடைக்கும், எப்படி கிடைக்கும் என்கிற ஆவலை அசைபோட்டுலவும்' அமைச்சர்கள். திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு நாட்டின் நாடி நன்ருகயிருக்க வேண்டும் என்பதுதான் முக்கியமே ஒழிய, வெறும் செல்வாக்கு அல்ல! அறிவார்கள் அமைச்சர்கள்—அநாவசியமாக மாதத்துக்கொரு கிளர்ச்சியும்' ஆண்டுக்கு ஒரு அறப்போரும் நடத்தவேண்டிய அவசியத்திலுமில்லை. நாம். இவைதான், அரசியலை வளர்க்கும், என்கிற கருத்தும் கொண்டோமில்லை. எனினும், இதுவரை பல துறைகளில் ஈடுபட்டாமல், தாயக விடுதலையை மட்டும் தமது நோக்காகக் கொண்டு பாடுபட்டவர்கள், இதுபோன்ற பிரச்னைகளிலும் ஈடுபட ஆரம்பித்துவிட்டார்களே என்கிற அச்சம், மாற்ருருக்கு மருட்சியை உண்டுபண்ணியிருக்கிறது.

மாடுபோல் உழைத்தும், மனித நீதி மறுக்கப்பட்டு, "நீங்கள் வெறும் கூலிகள் தான். கூலியை வாங்கிக்கொண்டு, உழைத்தால் உழைக்கலாம். எனக்கு இஷ்டமில்லாவிடில் உன் வயிற்றிலடித்துவிட்டு, நான் யாரை வேண்டுமாயினும் அமர்த்தி ப்யிர்த் தொழில் செய்வேன் — நெல்லுக்குப் பதில், கழனிகளையெல்லாம் கரும்புத் தோட்டமாக்கிஞலும் ஆக்குவேன்" என்று பிரபுக் குரலில் பேசிடும் பெரிய பண்ணைகளின் போக்கினைக் கண்டு மனம் வெதும்பி, துவக்கப்பட்டதாகும் அறப்போர்! அந்தத் தொகுதி சட்டசபை பிரதிநிதியான கருணுநிதி, சமரசம் காண முயன்ருர்—மாவட்டச் செயலாளரான **அன்பில் தருமலிங்கம்**, குளித்தலை வட்ட விவசாய சங்கச் செயலாளர் **முத்துகிருஷ்ணனுடனும்** கவுண்டம்பட்டி முத்து போன்ற விவசாயத் தொழிலாளர்களுடனும் விவசாய அமைச்சரைப் பேட்டிக்கண்டு நியாயம் கோரினர் — இருந்தும் பிரச்சினை தீரவில்லை! பிரபுக்கள் பெரிய மனது வைத்து இரக்கம் காட்டவில்லை!! அதுமட்டுமின்றி மன்னர்குடி மலபார் போன்ற பகுதிகளிலிருந்து ஆட்களைக்கொண்டுவந்து வைத்து பயிரிடவும் முயன்றனர். இரக்கம் கேட்டவனுக்கு 'அது இல்லை' என்று கூறியதுமன்றி, வயிற்றிலும் அடிக்க ஏற்பாடு செய்யலாயினர், மிராசுதார்கள்! இது தவறு என்பது அவர்கட்குத் தெரியுமாயினும், மிரட்டலும் அதட்டலாலும் ஆண்டாண்டு காலமாய்ப் பாடுபடும் ஏழையை மடக்கிட முனைந்தனர். கெஞ்சுதல் பலனளிக்கவில்லை—சமரசம் பயன்தரவில்லை — வேண்டுகோள், கேலிக்குரியதாகப்பட்டது — இந்த நிலையில் தான், அநீதி எங்கேயிருந்தாலும் அதனைக் களையப் போராடத் தயங்காத திராவிட முன்னேற்றக் கழகம் தனது அறப்போரைத் துவங்கியது!! நாட்கள் ஆறு, ஏழு என்று ஓடிக்கொண்டுள்ளன. ரசாபாசம் நடக்கும்—இன்னொரு 'தஞ்சை' நடத்தலாம்—எங்கே கண்ணீர்ப்புகை ரெடியா?—போலீஸ் படை குவியட்டும்—என்று 'எதையோ' எதிர்பார்த்தனர் சர்க்கார். இன்றுவரை ஒருதுளி அசம்பாவிதமும் நிகழ்வில்லை, குளித்தலைப் பகுதியில்! அவ்வளவு அமைதியாக உழவர் தம் அறப்போர் நடந்துவருகிறது!!

**ஆண்களும் பெண்களும் இத்தனை காலம் பாடுபட்ட கழனிகளில் இறங்குகிருர்கள்.**

**வழக்கம்போல மண்வெட்டி தூக்கிக் கொத்தியும், ஏர் பிடித்து உழுதும் தமது வேலையைச் செய்கிருர்கள்.**

**வேண்டாம்—இறங்காதே—என்று மிரட்டிய மிராசுதார்கள்கூட அஞ்சுமளவுக்கு அன்பும் அமைதியும் அரசோச்சுகிறது.**

**அறப்போர்—தொடர்ந்து நடக்கிறது !!**

'அறுபது நாற்பது' செய்துவிட்டோம்—குத்தகைதாரர்களுக்கு நீதி கிடைக்கச் செய்துவிட்டோம்—ஏழை விவசாயியின் கண்ணீர் துடைக்க சபதம் மேற்கொண்டுவிட்டது காங்கிரஸ்—என்று, அமைச்சர்கள், பேசாத நாளில்லை! ஆனால், 'நங்கவரம்' நடக்கிறது—காரணம், இவ்வளவு பேசும் அரசுக்கு, ஏழைகள் குரலெழுப்பும்போது, அதைத் தீர்த்திடத் துணிவில்லை — அறப்போர் நடாத்திப் பரிகாரம் காணவேண்டிய அளவுக்கு நிலைமை வளர்க்கப்படுகிறது!!


அரசு விரும்பினால், எந்தப் பிரச்சினைகளையும் உடனடியாகத் தீர்த்துவிட முடியும். இருக்கும் அரசும், ஏழை விவசாயிகள்பால் பரிவு கொண்டதாகவே காட்டிக் கொள்ளுகிறது. ஆனால், 'நங்கவரத்தாரை'க் கண்டதும் நடுக்கம் பிறக்கிறது — 'தேர்தல்' ஞாபகம் வருகிறது. அதனால், வாளாயிருந்துவிட்டு, ஏதாவது இரண்டு சொற்களை நம்மீது வாரியிறைத்துவிட்டால் போதும் என்று கருதுகிறது. இப்போக்கு, பாடுபட்டவனுக்குப் பலனும் தராது, அவன் பட்டினியைத் தீர்த்திடவும் உதவாது என்று உணர்ந்ததாலேயே தி. மு. க. அறப்போர் மூலமாவது வழி காண முயல்வோம் என்கிற கட்டத்துக்கு வந்தது.

அறப்போர், நீதியின் ஒளியை மட்டுமல்ல, தி. மு. க. - வின் சார்பில் மேற்கொள்ளும் செயல் எப்படிப்பட்டது என்பதையும் நாட்டுக்குக் காட்டி வருகிறது! வயலைக் காட்டி அங்கு புயலை எழுப்பிய பிறகு கழனிகளை இரத்தக் காடுகளாக்கும் பலாத்காரம் துளியும் தலை காட்டவில்லை இங்கே—ஏற்படுத்த விரும்பிடின் கையசைவு போதும் — நெற்களம், போர்க்களமாகிவிடும்!! எனினும் கேட்பது நீதி, நீதி எப்பக்கம் உளதோ அப்பக்கம் வென்றே தீரும் என்கிற அசையாத உறுதி நமக்கு உண்டென்பதால் அறப்போர் அமைதியுடனும் அன்பு நெறியுடனும் நடந்து வருகிறது. இதற்காக மகிழ்கிறோம—விவசாயப் பெருங்குடி மக்களின் உள்ளத் தெளிவு கண்டு வாழ்த்துகிறோம்!!

தொடர்ந்து இப்படியே நடக்குமானால், விளைவு எப்படியாகும் என்பதை விளக்கத் தேவையில்லை. சட்டம் இல்லாமலே விவசாயிகள், உழைப்பால் விளையும் அறுவடையையும் சொந்தமாக்கிக் கொள்ள நேரலாம — உழைப்பின் பலனைத் தாங்களே கொண்டு செல்லும்படி ஏற்படலாம்; நிலத்தில் இறங்கி உழும் இபபோது, வாளாயிருக்கும் மிராசுகள் அபபோது பதறும்—அலட்சியம் காட்டும் அரசும், மிராசுகளின் கோபப் பார்வை கண்டதும், மலபார் போலிசுடன் ஓடோடி வரும்!! இப்போதுள்ள நிலை, தொடர்ந்து நீடிக்குமேயானால், இந்த கட்டம் நிச்சயம் ஏற்படும்.

நிலப் பிரச்சினை, தெளிவாகவும் திட்டமாகவும் வரையறுக்கபபட வேண்டிய ஒன்று என்பதில் ஐயமில்லை. அந்நாள் வரும் வரையிலும், பாடுபடுவோரின் உழைப்புக்குப் பலன் கிடைக்கவேண்டும். நிலத்தையே நம்பி ஆண்டாண்டு காலமாய் வாழ்வோருக்கு நீதி கிடைக்கச் செய்யவேண்டும். இதனை, நிலப் பிரபுக்கள் உணரத் தவறிடின், உணர்த்த வேண்டிய பொறுப்பு ஆளவந்தவர்களுடையதாகும். பொறுப்பைத் தட்டிக் கழிக்கும் விதத்தில், தி. மு. க. - வின் போக்குக்கு மாசு கற்பிப்பதையே நோக்காகக் கொண்டு பேசித் திரிவது, பலன் தராது! மேலும் பல 'நங்கவரங்கள்' ஏற்படவே வழி அமைக்கும்!! எனவே, விரைவில் இச்சிக்கல் தீர, அரசு தீவிர முயற்சி எடுக்கவேண்டும். எடுக்குமா? நீதி பெற்றுத் தருமா?

★



மலேயா, வருகிற ஆகஸ்டு 31-ந் தேதியன்று சுதந்திரம் பெறுகின்றது! அன்றைய தினம் மலேயா மக்கள் ஆனந்தமும், அகமகிழ்வும் கொள்வர். பிரிட்டிஷாரின் பிடியினின்று விடுதலை பெறுகிறது, மலேயா. இந்த நாள் வரும் காலத்தில் மிக்க சிறப்போடு கொண்டாடப்படக்கூடும். 1956-பிப்ரவரியில் காலனி ஆதிக்க செகரட்டரி ஏ. டி. லெண்ணுக்ஸ் பாய்டும், மலேயபெடரேஷனின் முதலமைச்சர் துங்கு அப்துல் ரஹ்மானும் செய்துகொண்ட சுதந்திர ஒப்பந்தத்தின்போது எடுத்தபடமே இது. இனிமேல், இந்திய உபகண்டத்தைப்போல, மலேயாவும் காமன்வெல்த் அமைப்பில் அங்கம் வகிக்கும். புதுவாழ்வு பெறும், மலேயா வாழ்க என வாழ்த்துகிறோம்.

# வாழ்க்கையில் வள்ளுவர்

**மா.கி. தசரதன்**

இன்றைய தினம் தமிழர் முன்பு இருந்ததைவிட பெருத்த அளவில் திருக்குறளையும், திருவள்ளுவரையும் பற்றி எண்ணத் தொடங்கியுள்ளனர். எங்கும் வள்ளுவர் விழா நடைபெறுவதையும், குறள் மலர்கள் வெளியிடப் பெறுவதையும் காணுகின்றோம. இந்த நிலை தமிழர் இனம் சிந்தனையுலகில் தன் முயற்சியைச் செலவிடுகின்றது என்பதற்கு அறிகுறியாகும். தமிழர் வாழ்வு சிறப்பு அடையவும் சிந்தனையில் தெளிவு பெறவும் திருக்குறள் துணை செய்யும் என்பதனை இன்று அனைவரும் உணர்ந்திருக்கின்றனர்.

வேறு வேறு வகையான அரசியல், சமுதாய இயல் கொள்கைகள் படைத்தோர் எல்லோரும் திருக்குறள் என்ற ஓரிடத்திலே மட்டும் ஒன்றுபட்டு நிற்கின்ற நல்ல நிலை இருப்பதனைக் காணுகின்றோம். முன்னே திருக்குறளுக்குச் சிறப்பளிக்கும் 'திருவள்ளுவ மாலை' பாடபபட்டபோது வேறு வேறு வகைப்பட்ட சமயத்தினர் திருக்குறளைப் போற்றினர் என்று வரலாறு நமக்குக் கூறுகினறது. இனறு சமயத்தினர் எவ்வாறு இருப்பினும் சமுதாயத்தில் எல்லாத் துறையிலும் திருக்குறளுக்கு வரவேற்பும் பாராட்டும் இருந்து வருகின்றது. இந்தச் சூழ்நிலையைப் பலன் தரத் தக்க விதத்தில் பயன்படுத்தி சமுதாயத்தில் நல்ல பல மாறுதல்களைச் செய்துகொள்ளுதல் வேண்டும்.

விழா கொண்டாடப் படுவது வேடிக்கையும விளையாட்டும் இருக்கவேண்டும் என்பதற்காக மட்டும் அல்ல--நல்ல பயனை அந்த விழாவிலிருந்து பெற்ருக வேண்டும். இன்றேல் வீண் ஆரவாரமும் வெறும் முயற்சிச் செலவும் காலக் கழிவுமாகவே ஒரு விழா நடைபெற்று முடிந்துவிடும்.

வள்ளுவர் விழா அதைப்போல் வெறும் காலக் கழிவாக ஆரவாரமாக இல்லாமல் நல்ல பயன தரத் தக்க விதத்தில் இருத்தல் வேண்டும்.

வள்ளுவரைப் பாராட்டுகின்ற போதும இந்தக் குறிக்கோளை மனதிலே இருத்திக்கொண்டால்தான் வள்ளுவரைப் போற்றுவதிலேயும் பொருள் இருக்கும். இன்றேல் மற்ற சமய விழாக்களில் சமயக் குரவர்களைப் போற்றுகின்றபோது பயன் ஒன்றும் இன்றி, குறிக்கோள் ஒன்றும் இன்றி, எல்லோருப் கூடி, கோலாகலமாக ஒரு பொழுதைக் கழித்துவிட்டுப் போவதைப் போலத்தான் வள்ளுவர் பெயராலும் எனறைக்கேனும் ஒரு நாளைக்கு எல்லோரும் 'விழா' கொண்டாடிவிடடுப்போய்விடுவார்கள். விழாவின்வேடிக்கைகள்முடிந்த பின் வள்ளுவரை மறந்து, அவர் தந்த அறிவுரையை மறந்து வாளா இருக்க நேரும்.

மற்ற விழாக்களைப்போல் இல்லாமல் மாண்புள்ள முறையில் நல்ல பயனைத் தந்து மக்கள் இனம்—சமுதாயம்—நாடு சீர்திருந்தவும் செம்மையுறவும்,சிறப்புப்பெறவும், வள்ளுவர்விழா பயன்பட வேண்டுமானால் வள்ளுவர் கூறியவற்றை எண்ணிப்பார்த்து அவற்றை இயன்ற அளவு வாழ்க்கையில் கைக்கொண்டு ஒழுக முயற்சித்தல் வேண்டும்.

இந்த முயற்சியில் தமிழர்கள் இன்று காட்டும் ஆர்வத்தில் ஒரு கூறுகூட சில ஆண்டுகளுக்கு முன் வரை காட்டாமல் இருந்தனர்.

எங்கோ பிறந்து இங்கு வந்த கீதை போன்ற நூல்களில் சிலருக்கு அன்பு மிகுந்து அவையே சிறந்த நூல்கள் என்று பாராட்டினர். ஏதுமறியாத ஏமாந்த சிலர் உண்மைதான் போலும் என்று அவ்வாறே தாங்களும் எண்ணிவிட்டனர். அதனால் தமிழர்கள் தங்கள் சொந்த உதிரத்தில் உதித்த உயர்ந்த உண்மைகளை மறந்து மாற்றாரின மாசுண்ட கருத்துக்களைத் தூக்கிவைத்துக் கொண்டு ஆடிமகிழ்ந்தனர்.

இந்த இழிநிலையைத் தமிழ்த் தொண்டர்கள் விளக்கிக் காட்டத் தொடங்கியதும் கீதையின் காவலர்கள் "திருக்குறள் வேறு ஒன்றும் அல்ல—கீதையின்மொழிபெயர்ப்புத்தான்" என்று துணிந்து கூறினர். இந்தக் கூற்றையும் சிலர் நம்பத் தொடங்கியது உண்மையில் வியப்பேயாகும். கீதை வடவர் நெறி நின்று நால்வகை வருணத்தை நிலைநாட்டிட ஆக்கப்பட்டதொரு நூல். ஆனால் வள்ளுவர் செய்த திருக்குறளோ 'மக்கள் நிகர்' என்ற கருத்தினை உறுதிப்படுத்த எழுந்தது. பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும் என்பது பெருமை மிகுந்த வள்ளுவர் உரைத்த நெறி. இதனைத்தான்

முன்னமேயே பேராசிரியர் சுந்தரனார் அவர்கள் தம்முடைய மனோன்மணிய நாடக நூலின் தமிழ்த் தாய் வாழ்த்துப் பகுதியில் "வள்ளுவர் செய்த திருக்குறளை மறுவற நன்குணர்ந்தோர்கள், உள்ளுவரோ மநுவாதி ஒரு குலத்துக்கு ஒரு நீதி" என்று எடுத்துக் காட்டி இருக்கின்றார்.

எனவே அடிப்படையில் திருக்குறள் தமிழர் நெறியில் நின்று நல்ல சமுதாயத்தைக் காணுவதற்காகச் சமைக்கப்பட்ட ஒரு கோட்பாடு என்று கொள்ளுதல் வேண்டும்.

அத்தகைய உயர்ந்த இடம் திருக்குறளுக்குக் கிடைக்கின்ற போது, அது வாழ்க்கையின் வழி காட்டியாக விளங்கிடும்போது அதனை நன்றாக உணர்ந்துகொள்ளும் கடமை நமக்கு வந்து வாய்க்கின்றது.

நன்றாக உணர்ந்துகொள்ளும் கடமை என்றால் எழுத்து எண்ணி சீரும் தளையும் பிரித்து அகராதி வைத்துக்கொண்டு சொல்லுக்குப் பொருளைத் தேடி அலுத்துப் போகும் அந்த முறையை நினைவு படுத்திக் கொள்ளுதல் வேண்டாம். அந்த முறையில் திருக்குறளை மட்டும் அல்ல, எந்த நூலை —இலக்கியத்தைப்—படித்தாலும் சொல்லுக்குப் பொருள், சொற்றொடருக்கு இலக்கண அமைதி இவை தெரியுமே ஒழிய சொல் உணர்த்தும் கருத்து, அந்தக் கருத்திலே பிறக்கும் புதுமை இவை தெரிய இயலாது. எனவே திருக்குறளை வெறும் இலக்கியச் சுவைக்காகவோ அல்லது அறிவுக் கடல் இது என்று பாராட்டுவதற்காகவோ மட்டும் படிக்காமல் வாழ்க்கையின் வழிகாட்டி என்று கருதிக் கற்றல் வேண்டும். கடலில் வரும் கலங்கட்கு 'இது கரை' என்று உணர்த்தி நிற்கும் கலங்கரை விளக்கம்போல வாழ்க்கைக் கடலில் இருக்கும் நமக்கு இதோ இது நல்ல நெறி என்று அமைத்து, வழியுணர்த்தும் நூல் என்று அதனை ஓதி உணர்தல் வேண்டும்.

அப்படி உணருகின்ற முயற்சியில் தலையிடுகின்ற நேரத்தில் திருவள்ளுவரையே நாம் நேரடியாகக் கண்டு "நீங்கள் என்ன சொல்லுகின்றீர்கள்?" என்று கேட்டு அறிய வேண்டுமேயல்லாமல் இடையிலே இருக்கின்றவர்களைக் கேட்டல்கூடாது. ஏனெனில் இடையே இருப்பவர்கள் தாங்கள் எண்ணுவதைத்தான் சொல்லுவார்களே தவிர முதல்வர் சொன்னதையே சொல்லுவார்கள் என்பதில் உறுதியில்லை. மூல நூலுக்கு உரை எழுதுகின்ற—எழுதியிருக்கின்ற — உரையாசிரியர்கள்தான் அந்த இடையில் இருப்பவர்கள். அவர்களுள் பரிமேலழகரே நிரம்பக் கற்றவர்—புலமை மிக்கவர்—என்றெல்லாம் எடுத்துச் சொல்லப்படுகின்றது. அந்தப் பரிமேலழகர் பல இடங்களில் தமிழர் நெறியறியாது தாம் தடுக்கி வடவர் நெறியில் வீழ்ந்துபடுகின்றார். தாம் விழுவது மட்டுமின்றி நம்மையே விழச் செய்கின்றார். நம்மை விழச் செய்வது மட்டும் அல்ல, திருவள்ளுவரையும் விழச் செய்கின்றார்.

பரிமேலழகரின் மீது நமக்கு வெறுப்பு, அதனால் இவ்வாறு சொல்லுகின்றோம் என்று முதன் முதலில் தூற்றிப் பார்த்தார்கள் சிலர். ஆனால் இன்று தமிழ் ஆராய்ச்சி யுலகம் உண்மையை உணர்ந்துகொண்டு பரிமேலழகரின குறைகளை எடுத்துச் சொல்லுகின்றது.

பேராசிரியர் சேது (பிள்ளை) அவர்கள் தமது திருவள்ளுவர் நூல் நயம் என்ற நூலில் பரிமேலழகரின் குறைகளைத் தனி ஒரு பகுதியாகவே அமைத்துள்ளார். நாமக்கல் இராமலிங்கம் அவர்கள் திருக்குறளுக்குத் தாம் எழுதியுள்ள உரையில்,

"திருவள்ளுவருடைய காலத்துக்குச் சுமார் ஆயிரத்து நானூறு ஆண்டுகளுக்குப் பின்னால் தோன்றிய பரிமேலழகர், திருவள்ளுவருடைய கருத்தையும், திருவள்ளுவர் காலத்தில் அரங்கேற்றப்பட்ட உரைகளையும் ஆராய்ந்தெழுத அவகாசமில்லாதவராகி, தம்முடைய காலத்தில் வழங்கிய உரைகளையும் அப்போதிருந்த சமூகப் பழக்க வழக்கச் சம்பிரதாயங்களையும் தழுவித் தம்முடைய உரையைச் செய்திருக்கின்றார்........எனவே அவருடைய உரைகளும் அநேக இடங்களில் திருவள்ளுவருடைய கருத்துக்கு ஒவ்வாதனவாகவும் தத்துவங்களுக்கும் சத்தியங்களுக்கும் முரண்பட்டனவாகவும் இருக்கின்றன."

என்று குறிப்பிட்டுச் சொல்லுகின்றார்.

எடுத்துக்காட்டுக்கு ஒன்று:

அன்புற்று அமர்ந்த
வழக்கென்ப வையகத்து
இன்புற்றார் எய்தும் சிறப்பு

என்ற குறளுக்குப் பரிமேலழகர்'

இல்வாழ்க்கைக் கண் நின்று இன்பம் நுகர்ந்து அதன்மேல் துறக்கத்துச் (மோட்ச உலகம்) சென்று பேரின்பத்தை அடைதல் அன்புற்று அமர்ந்த வழக்கு"

என்று குறிப்பிடுகின்றார்.

இங்கு இன்புற்றவர்கள்--சிறப்பு எய்துதல், என்ற இரண்டு நிலைகள் பேசப்படுகின்றன. இன்பம் உறுதல் என்பது தன் மனதில் மட்டும் இருப்பது. அந்த இன்பத்தினைப் பிறரும் பாராட்டுவது தான் சிறப்பு—புகழ் எல்லாம். ஒருவனுக்கு உலகத்தில் சிறப்பும் புகழும் ஏற்படுகின்றது எனின், அவன் மனதில் இருக்கும் அன்பே அதற்குத் துணைசெய்து அவனைக் கொடையாளியாக்கிச் சிறப்பிக்கின்றது.

இன்புறுதல் — சிறப்பு எய்துதல் என்ற இந்த இரண்டும் இந்த உலகத்திலேயே நடைபெறும் செயல்களாக இருக்கப் பரிமேலழகர் மேல் உலகத்தை வலிந்து இடையிலே நுழைத்திருக்கின்றார்.

இதைப் போன்று பல இடங்களில் பரிமேலழகரின் கைவண்ணம் பட்டுக் குறட் கருத்துக்கள் மாசுண்டு கிடக்கின்றன.

எனவேதான் இடையிலே இருப்போரை ஏதும் கேட்காமல் நாமே நேரே திருவள்ளுவரின் மொழிகளையே ஆராய்ந்து அறிவு பெறுதல் நல்லது—சிறந்தது—பயனுள்ளது என்று கருதுகின்றோம்.

அந்த முயற்சியில் ஈடுபட்டு திருக்குறளைக் காணுகின்றபோது திருக்குறள் முழுவதையும் நம்முடைய வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுக முடியும் என்று தவறாக எண்ணிக்கொண்டு இடர்ப்படுதல் கூடாது. திருக்குறளில் கூறப்படுவனவற்றுள் சமுதாயச் சூழலும், நம்முடைய நிலைமைகளும் எவ்வவற்றினுக்கு இடம் தருமோ அவ்வவற்றை மட்-

டுமே மேற்கொண்டு ஒழுகல் வேண்டும்.

அன்பிலார் எல்லாம்
தமக்கு உரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு

என்ற குறளில் அன்பு உடையவர்கள் தங்கள் எலும்பாலும் பிறர்க்கு உரியவர்களாக இருந்து உதவுவார்கள் என்று சொல்லப் படுகின்றது. பருந்து ஒன்றனை அஞ்சி அடைக்கலம்போல வந்த புருவினுக்காகத் தானே துலாக் கோலில் நின்ற சிபியின் கதையை எடுத்துக் காட்டாகச் சொல்கின்றனர்.

எங்கேயோ ஒரு சிபியினால் அப்படி இருக்கக் கூடுமே யல்லாமல் சராசரி வாழ்க்கை வாழும் சாதாரண மனிதனால் அது இயலாதது. அப்படித்தான் இருக்கவேண்டும் என்று அவனை வற்புறுத்தியும் பயனில்லை — வற்புறுத்துதல் இயற்கையும் அன்று.

எளியவாழ்க்கை-தானே எல்லாம் செய்துகொள்ளுதல்என்ற உயர்ந்த கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு காந்திஅடிகள் வாழ்ந்து வந்தார். ஆனால் அவருக்குப்பின் அந்த நெறி முறைகளை இன்று பின்பற்றுவார் யாரும் காணேம். அவருடைய வாரிசு என்று புகழப்பட்ட நேருவாலும் அது இயலவில்லை.

தேடித் தேடி ஒரு விநோபா பாவே என்று சொல்லமுடிகின்றதே ஒழிய பலராக அந்த வழியில் செல்வோர் இல்லை.

ஒரு உயர்ந்த கொள்கை என்பது எல்லோருக்கும் எட்டக்கூடிய இடத்திலே இருந்தால் தான் அதை அடைய முயற்சி செய்வதற்காவது மனம் இருக்கும். நம்மாலும் முடியும் என்ற நம்பிக்கையைத் தூண்டுகின்ற அளவிலாவது அது இயற்கையோடு ஒட்டியிருக்கவேண்டும்.

உயர்ந்த இலட்சியங்கள் என்பவை தூரத்தில், வான முகட்டில் மின்னிடும் விண்மீன்களைப்போன்றவை. வீட்டுக் கூடத்தில் ஒளி தரும் அகல் விளக்குகள் அல்ல அவை.

விண்மீன்கள் அழகுடன் அருமையாக இருப்பினும் அதை அடையவேண்டும் என்ற எண்ணம் யாருக்கும் ஏற்படுவது இல்லை. ஆனால் அகல் விளக்கு காற்றில் அணைந்துபோகும் சிறுமைத்து என்றாலும் ஒளி தந்து உதவுகின்றது — ஏழையாலும் எடுத்துவைக்க முடிகின்றது.

அதைப்போலவே குறிக்கோள்கள் எப்போதும் எடுத்துப்பிடிக்கக்கூடிய எளிமையோடுஇருத்தல் வேண்டுமேயல்லாமல் எடுத்த உடன் எரித்துச்சுடும் சூட்டுக் கோலாக இருக்கக்கூடாது என்று உலகம் இன்றுவரை நம்பிக் கொண்டிருக்கின்றது.

என்பும் உரியர்
பிறர்க்கு

என்பது யாரோ ஒருவருக்கு — கோடியிலே ஒருவராக இருக்கலாம்—சொல்லப்பட்ட இலட்சியம் கனவு—கற்பனை — என்று கருதுதல் வேண்டும்.

சாதாரண வாழ்க்கையில் இருக்கும் சராசரி மனிதனுக்கு அந்த அறிவுரையால் பயன் ஒன்றும் இல்லை.

இதைப்போல் திருக்குறளில் எது எது வாழ்க்கையில் கொண்டு ஒழுக இயலும் என்று அறிந்து கொள்ளும் பயிற்சி இருத்தல் வேண்டும்.

இதிலே வெட்கப்படுவதற்கு ஒன்றும் இல்லை. இது நம்மால் இயலாது என்பதை உணர்ந்து அதை விட்டுவிடுதல் — கிட்டாதாயின் வெட்டென மறத்தல் — இருந்தால் நாம் பெற்றதனை எண்ணி மகிழுவோம். கிடைக்காததை எண்ணி ஏங்கி வருந்த மாட்டோம், எனவே எவையெல்லாம் எங்கோ ஓரிடத்தில் வான முகட்டில் மின்னிடும் விண்மீனைப் போல் பளிச்சிட்டுக்கொண்டிருக்கின்றனவோ அவற்றை நாம் அழகானது என்று பாராட்டலாம், அருமை என்று போற்றலாம்.

ஆனால் அடையமுடியவில்லையே என்று ஏங்கி, அடைந்து தீர வேண்டும் என்று முயன்று நோவுறு நல்லவைகளை இழந்துவிடக் கூடாது.

இந்தத் துணிவு எளிதில் ஏற்பட இயலாது. அப்படி ஏற்பட்டால் அந்தத் துணிவு வரவேற்கப்படவேண்டுவது, அதனால் பலன் நிரம்ப உண்டு.

வள்ளுவர் விழா கொண்டாடப்படுகின்றநேரத்தில்,இதிலேபாருங்கள் எதுகை—இங்கேபாருங்கள் சொல்லின் சிறப்பு இந்தக்காதல் நாடகத்தைப் பாருங்கள், தும்மலை வைத்துக்கொண்டே எவ்வளவு அழகாக அமைத்திருக்கின்றார் — என்று இவற்றை, இவற்றை மட்டுமே, பேசிக்கொண்டிருந்தால் பயனில்லை. இவையும் தேவை. இவற்றோடு புதுமையில் முகிழ்க்கும் கருத்துக்களும் தேவை. 'இது என்னவோ' என்று புதியனவற்றைக் கண்டு அஞ்சி நடுங்கிவிடுதல் கூடாது. புதிய புதிய முறைகளில் — நெறிகளில் சென்றால்தான் சுவை இருக்கும்.

ஆங்கில மொழியில் சேக்ஷ்பியர் எழுதியது முப்பது முப்பத்தைந்து நாடகங்கள் என்றால் அந்த நாடகங்களைப்பற்றி எழுந்துள்ள ஆராய்ச்சி நூல்கள் மூவாரத்துக்குமேல்இருக்கின்றன. அந்த ஆராய்ச்சிகள், பலதிறத்தனவாக இருக்கின்றன. சேக்ஷ்பியர் நாடகங்களை எழுதியது சேக்ஷ்பியரே அன்று என்றுகூட மேற்கு நாடுகளில் ஆராய்ச்சியாளர்கள் சொல்லுகின்றனர். அதனால் அந்த நாடகங்களுக்கு ஒன்றும் கெடுதல் வந்துவிடவில்லை. எனவே 'திருவள்ளுவரில் இது வேண்டும் இது வேண்டாம் என்ற ஆராய்ச்சியா? இது என்ன கேடு' என்று திகைத்துப் போக வேண்டாம். எது தேவை எது தேவையில்லை என்று அறிகின்ற முயற்சியில்தான் மனித இனம் மட்டுமல்ல—உலகமே — இயங்கிக் கொண்டிருக்கிறது. இயற்கை நியதியே அதுதான்.

எனவே திருவள்ளுவர் நினைவு நாள் போன்ற விழாக்களில் வெறும் விழா எடுத்துவிட்டோம் என்று பூரிப்படைவதைவிட இலக்கியத் துறையின் வளர்ச்சிக்கு வித்து இட்டோம் என்று எண்ணி மகிழ்வதுதான் நல்லது சிறந்தது, தேவையானது.

★



# உருவாகும் வரலாறு

25–8–57-ல் ஞாயிறன்று சிதம்பரம் பொதுக் கூட்டத்தில் சி. என். ஏ. ஆற்றிய உரை.

இன்றைய வரவேற்புக் கூட்டத்தில் உங்களுடைய பேரன்பை நீங்கள் பல்வேறு வடிவங்களில் தெரிவித்திருக்கிறீர்கள் என எண்ணி உண்மையிலேயே பெருமைப்படுகிறேன். ஆனால் அதே நேரத்தில் சிற்றூரில் உள்ள கழகத் தோழர்களும், சிதம்பரத்திலே உள்ள கழகத் தோழர்களும், விவசாயப் பெருங்குடி மக்களும், பழங்குடித் தோழர்களும், பல்வேறு துறைகளைச் சேர்ந்தவர்களும், தத்தமது அன்பினை என்னிடம் தெரிவிக்கிற வகையில் மலர்மாலைகளையும், கைத்தறி ஆடைகளையும், அவர்கள் அணிவித்த அந்தக் காட்சியை நான் எண்ணிக்கொண்டிருக்கின்ற நேரத்தில், எனது மனதிலே பட்டதை சொல்லுகிறேன். தாழ்ந்து கிடக்கின்ற ஒரு இனம் தன்னுடைய நிலையைத் தெரிந்துகொண்டு விடுதலை பெறுவதற்கான ஒரு காலம் பிறக்கின்ற நேரத்தில் மிகச் சாதாரண மனிதனும் அந்த இனத்தைச் சேர்ந்தவன் என்ற ஒரே காரணத்தினாலே உயர்த்தப்படுகின்றான். அதைத்தான், இந்த வரவேற்பு நினைவூட்டிற்று. இது தனிப்பட்ட முறையிலே என்னிடத்திலே உள்ள தகுதிகள், ஆற்றல் இவைகளை ஒட்டி தரப்பட்டதல்ல என்பதனை நான் உங்களிடத்திலே சொல்லுகின்ற நேரத்திலே உபசாரத்திற்காக சொல்லுகிறேன் என நினைக்கத் தேவையில்லை. உண்மையிலேயே நம்முடைய தமிழகத்திலும் சரி, அதை அடிமைப்படுத்தியிருக்கும் இந்தியத்துணைக் கண்டத்தின் பல்வேறு பகுதிகளானாலும் சரி, ஆற்றல் மிக்கவர்கள், அறிவிலே சிறந்தவர்கள், வரலாற்றுத் தெளிவுள்ளவர்கள் உலகத் தொடர்பு கொண்டவர்கள் என்னிலும் மிகப் பலர், பெரியவர் பலர் உளர். இதனை நான், கூறுவதல்ல; நாடு நன்றாக அறியும். ஆனால் சாமான்யனான என்னை அவர்கள் தேர்ந்தெடுத்து இந்த இனம் இன்றையதினம் எழுச்சி பெற்றிருக்கிறது விழிப்படைந்து இருக்கிறது விடுதலை வேட்கை கொண்டுள்ளது என்பதைக் காட்டும் முகத்தினாலேதான் என்னை அவர்கள் தங்களுடைய பிரதிநிதியாக இந்த வரவேற்புகளை எல்லாம் நடத்தினார்கள். ஆகையினாலேதான் தங்கச் சுரங்கத்தைத் தோண்டுகின்ற நேரத்தில் தங்கம் கிடைப்பதற்கு முன்னாலே தங்கமோ என்று ஐயுறத்தக்க சாதாரண கல் கிடைத்தாலும், தோண்டினவன் எவ்வளவு ஆவலோடு அதைக் கையிலே எடுத்து வைத்துக்கொண்டு, "நீண்டநாள் நான் பட்டபாட்டின் பலனை இன்றைய தினம் காணுகின்றேன். இதோ என்னுடைய கரத்திலே உள்ளது தங்கக் கட்டி. இது கல் போல தோன்றினாலும் உள்ளே ஓடுவது தங்கரேகை" என்று, சுரங்கத்திலே பிறகு தங்கத்தை கண்டுபிடிக்க வேண்டியவன் முதலிலே கிடைத்த தங்கம் போன்ற கல்லை எடுத்து வைத்துக் கொண்டு குதூகலப்படுவானே அதைப்போல், திராவிடத்தை நாளையதினம் காணவேண்டிய நீங்கள், அந்த ஆழ்ந்த காரியத்தில் ஈடுபடுகின்ற நீங்கள், விடுதலைப் பாதைக்காகச் சுரங்கவழி அமைத்துக் கொண்டிருக்கும் நீங்கள், இடையிலே கிடைத்த, தங்கமல்ல, தங்கம் போன்ற ஒரு கல்லை எடுத்துவைத்துக்கொண்டு இந்தக் குதூகலக் கொண்டாட்டத்தை நடத்துகின்றீர்கள். ஆகையினாலேதான் இப்படிப்பட்ட விழாக்களைப்போல் நீங்கள் வரவேற்புகளை நடத்துகின்ற நேரத்தில் எனக்கு ஒரு புறத்திலே மகிழ்ச்சி. மற்றொரு புறத்திலே அச்சம். எதிலே மகிழ்ச்சி என்றால் திராவிட இனம்—தன்னை விடுவித்துக்கொள்ளுகிற பெரு முயற்சியிலே இதனை ஒரு கட்டமாகப் பயன்படுத்துகிறது என்பதிலே ஒரு மகிழ்ச்சி. எதிலே எனக்கு அச்சமென்றால் இதைப்பார்த்து அருவருப்பு அடைகிறவர்கள், இதைப்பார்த்து அசூயை அடைகிறவர்கள் நம்மிடத்திலே வருவதற்குக் கால தாமதம் ஏற்படுமோ என்று எண்ணுகின்ற நேரத்தில் நான் சிறிதளவு அச்சப்படுகின்றேன். ஏனென்றால் நீங்கள் என்னிடத்திலே காட்டுகின்ற அன்பு அவர்களிலே சிலபேரை நம்மிடத்திலே விரைவாக வருவதைத் தடுத்துவிடக்கூடும். என்றாலும் கூட அவர்களை நான் எந்த வகையிலே கருதிக் கொண்டிருக்கின்றேன் என்றால், பத்து மாதம்

# வண்ணக் கலைஞர்கள் வரவேண்டும்

சுமந்து பெற்ற குழந்தையை அணைத்து முத்தமிடுகின்ற நேரத்தில், ஆறு மாதக் கர்பவதிக்கு கொஞ்சம் அருவருப்பாகக்கூட இருக்கும். ஆனால் எனக்கிருக்கின்ற நம்பிக்கை எதிலே என்றால் அவளும் ஆறு மாத கர்பவதியே தவிர மலடி அல்ல. ஆகையினாலே குழந்தை பிறக்கும். இன்னையதினம் பிறந்த குழந்தையை முத்தமிடுகின்ற தாயைப் பார்த்துத் தன்னுடைய அடிவயிற்றிலே தன்னையும் அறியாமல் கரம் சென்று விரல் ஒவ்வொன்றாக எண்ணி ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு என்று எண்ணி இன்னும் நான்கு மாதத்திற்குப பிறகு அல்லவா நம்முடைய கருவிலிருந்து ஒரு குழந்தை பிறக்கும், அப்போதல்லவா நாம் எடுத்து மகிழ வேண்டும் என்று எண்ணிக் கொள்ளுகின்ற ஆறுமாதக் கர்ப்பவதிபோல் இக்கூட்டத்தின் ஓரத்திலே உள்ள மாற்றுக் கட்சித் தோழர்கள்நம்மிடம்கொஞ்சுகின்ற காலம் விரைவில் வரும். இதற்கு இடையிலே அவர்களுக்குப்பத்து மாதம்சுமந்து பெற்ற குழந்தையைத்தாய் கொஞ்சுகின்ற நேரத்தில்குழந்தை இன்னமும் பிறக்காமல் இடுப்புவலி மட்டும் எடுத்துக் கொண்டிருக்கும் தாய் கொஞ்சம் அருவருப்பு அடைவதைப்போல் அருசைப்படுவார்களே, ஏன் அவ்வளவு நல்லவர்களை நீங்கள் சங்கடப்படுத்துகிறீர்கள் என்பது தான் எனக்கிருக்கின்ற அச்சமே தவிர வேறு ஒன்றுமல்ல. மற்றொரு வகையிலே நீங்கள் பார்த்தால்,

ஒரு இனம் தன்னை விடுவித்துக் கொள்ளுவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளுகிறது என்றால் அந்த இனத்திலே உள்ள எல்லாத்துறைகளிலேயும்அதற்கோர் மறுமலர்ச்சிஉணர்ச்சியும் உரிமை வேட்கையும் எழும்.

நாமாக ஓர் வீடுகட்ட ஆரம்பித்தால், வீடு கட்டுகின்றவர்களுக்கு நான் சொல்லுகின்ற பிரச்னை புரியும்; வீட்டினுடைய அடித்தளம் போடுகின்றபொழுது, அவன் தன்னுடைய நண்பர்களை எல்லாம் கூட்டி வந்து அந்த அடித்தளத்தை எல்லாம் காட்டுவான். இது சாதாரண அடித்தளமல்ல, ஆறடி ஆழம் வெட்டி இருக்கின்றேன்; சாதாரண உப்பு மண் கொட்டவில்லை, நல்ல கெட்டி மண்ணைக்கொட்டிஇருக்கின்றேன், நான்கு மாடி கட்டலாம், அத்தனையும் இந்த அடித்தளம் தாங்கிக் கொள்ளும் என்று இந்த அடித்தளத்தையே காட்டுவான். காட்டப்படுகின்ற நேரத்திலே, பார்க்க வருகின்ற நண்பருக்குக்கூட கொஞ்சம் அருவருப்பாக இருக்கும்.

என்ன, இதனுடைய சுற்றுச் சுவரே எழும்பவில்லை, ஜன்னல் கதவு பொருத்தவில்லை, கதவு இருக்கவேண்டிய இடம் தெரியவில்லை, கூரையோ இன்னமும் இல்லை, இதைக்காட்டி இவ்வளவு மகிழ்கின்றானே என்பர்; ஆனால், அடித்தளம் போட்டவருக்குத் தெரியும்,இந்த அடித்தளம் போடுவதற்கு எவ்வளவு அரும்பாடு பட்டேன், என்று.

அதைப்போல திராவிட இனம் இன்றையத் தினம் அடித்தளம் போட்டிருக்கின்றது. இந்த அடித்தளம், நாம் போடுவதற்காக எடுத்துக்கொண்ட முயற்சியை எண்ணுகின்ற நேரத்திலும், அந்த முயற்சியில் நாம் ஈடுபட்டிருந்த நேரத்தில் நமக்கு ஏற்பட்ட இடையூறுகள், இன்னல்கள், இடுக்கண்கள், நம் பேரிலே வீசப்பட்ட இழிமொழிகள், பழிச்சொற்கள் நம்மைப்பற்றி நாலா பக்கத்திலும் கிளம்பிய தூற்றல்கணைகள், இவைகளையெல்லாம் தாங்கிக் கொள்ளுவதற்கு நம் உள்ளத்திலே ஏற்பட்ட நெஞ்சு உரம் எப்படி நமக்கு கிடைத்தது என்பதை எண்ணிப் பார்த்து இந்த அடித்தளத்தைப் பார்க்கிற நேரத்தில், நண்பர்களே! தோழர்களே! நாட்டிற்கு உரியவர்களே! நாட்டை மீட்க கடமைப்பட்டவர்களே! திராவிடப் பெருங்குடி மக்களே! உங்களுக்கு நான் பெருமையுடன் சொல்லிக்கொள்ளுவேன்;

நாம் போட்டிருக்கின்ற இந்த அடித்தளம் சாமானியமானதுமல்ல, காலத்தாலே கல்லி எறியபபடக்கூடியதுமல்ல, காதகர்கள் எவ்வளவு பெரிய கல் நெஞ்சத்தை கடப்பாரையாக்கி அவர்கள் கல்லினாலும், போட்டிருக்கும் இந்த அடிதளத்தை அவர்களாலே கல்லி எறிய முடியாது—அந்த அளவுக்குப்பலமான அடித்தளம் போட்டாகிவிட்டது.

இனி வண்ணக் கலைஞர்கள் வரவேண்டும்; கட்டிட நிபுணர்கள் வரவேண்டும்; அவர்கள் அழகான எழில் மாடத்தைக் கட்ட வேண்டும்.

திராவிடம் என்பது அந்த எழில் மாடம்தான், அதைக் கட்டத்தக்க ஆற்றல் படைத்தோர்கள் எண்ணற்றவர்களை, என் முன்னாலே பார்க்கிறேன். அவர்கள் அதற்காக தங்களை ஒப்படைக்கின்றார்கள் என்பதைத்தான் என் கழுத்திலே விழுந்த ஒவ்வொரு மாலையும் சொல்லுகின்றது; எனக்கு அளிக்கப்பட்ட ஒவ்வொரு கைத்தறி ஆடையும் அந்தக் காதையைத் தான் எடுத்துச் சொல்லுகின்றது.

தோட்டத்திலே பூக்கின்ற மலரை எந்த வகையில் பயன்படுத்துகின்றோமோ, அந்த வகையிலே அந்த மலருக்கு மாண்பு கிடைப்பதைப்போல் நம்முடைய நண்பர்கள் என்னுடைய கழுத்திலே போட்ட இந்த மாலைகள் எந்த நோக்கத்திற்காக எந்த கருத்திற்காக போடப்பட்டன என்பதைத்தான் நீங்கள் மாலையைப் போட்ட நேரத்தில் நான் எண்ணிக்கொண்டேன்.

ஏறக்குறைய மண அறைக்கு வருவதற்குமுன்னாலே மணமகனை, பெண்ணை அழைத்துக்கொண்டு வருகின்றவர்கள் தொலைவிலே கேட்கின்ற நாதசுரத்தில் அது கலியாணியா காம்போதியா என்பதைக்கூட கண்டுபிடிக்க முடியாமல் ஓகோ நாதசுர ஓசை கேட்கின்றது, வருகின்றாள் மணப்பெண், மண அறைக்குள் நுழையப் போகின்றாள், நாமும் பக்கத்தில் அமரப்போகின்றோம், என்று அதையே அவன் எண்ணிக் கொண்டிருப்பதைப்போல், எண்ணிக்கொண்டிருக்கின்ற காரணத்தாலே காம்போதியா, கல்யாணியா என்றுகூடக் கண்டு

# மிகப் பெரிய காரியத்தில் ஈடுபட்டுவிட்டோம்

பிடிக்கமுடியாமல் அவனையும் அறியாமல் கனிந்த பார்வையைக் காட்டி அதை ரசித்துக் கொண்டிருப்பதுபோல், நீங்கள் மாலைகளையெல்லாம் போட்டநேரத்தில், போட்டவர்களையெல்லாம் பார்க்க முடியாமல் அவர்களுடைய பெயர்களையெல்லாம் தெரிந்துகொள்ள முடியாமல் எதை எண்ணி மகிழ்ந்துகொண்டிருந்தேன் என்றால் எத்தனை சிற்றூர்களிலே நம்முடைய கழகங்கள் இருக்கின்றன, எத்தனையெத்தனை சிற்றூர்களில் கழகங்களைக் காளையர்கள் கட்டிக்காத்துக் கொண்டு வருகினறார்கள், அவர்கள் உள்ளத்திலேதான் எத்தனை கனிவு தோன்றியிருக்கின்றது; இன்று காலையிலே அந்த சிற்றூரிலே ஒரு தோழன் மலர்க் கடைக்குச் சென்று மாலை வாங்கியிருப்பான்; மாலை கட்டிக்கொண்டிருந்தவர்கள் 'என்ன மாலைக்கு'? என்று கேட்டிருப்பான்; சிதமபரத்திலே ஒரு வேலை என்றிருப்பான்; தில்லை — நடராசனுக்கா என்று கேட்டிருப்பான்; இல்லையப்பா என்று சொல்லியிருப்பான்; அப்படி இல்லை என்றால் யாருக்கு என்று கேட்டிருப்பான்; அண்ணா வருகிறார் என்று சொன்னவுடன் அண்ணாவா என்று கேட்டுத் தன்னுடைய விருப்பு வெறுப்புகளை, தன் சுருதி பேதம் கொண்ட குரல் மூலம் விளக்கி மாலையைக் கொடுத்திருப்பான். அவன் அந்த மாலையை எடுத்துக்கொண்டு அந்தச் சிற்றூரில் காலைமுதல் நடந்திருப்பான். வருகினற வழியெல்லாம் பார்க்கின்ற நண்பர்களிடத்திலெல்லாம் "சிதம்பரம் செல்லுகின்றேன்; திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டம் நடைபெற இருக்கின்றது, அண்ணாவும், மற்றவரும் வருகின்றனர், அவர்களுக்குத்தான் இந்த மாலை" என்று சொல்லுகின்ற நேரத்தில் சிதம்பரம் வட்டாரம் பூராவும் நம்முடைய கழகப் பிரசாரம் நடந்தது. அந்தப் பிரசாரத்தினுடைய குறிகள்தான் இந்த மலர் மாலை என்பதாலேதான் மதிப்பு இன்றைய தினம்.

தோட்டத்து மல்லிகையை வீட்டிலே உள்ள வாலிபன் பறித்து எதிர்புறத்திலேயோ, பக்கத்து வீட்டிலேயோ உள்ள தன்னுடைய காதலிக்கு மதில் சுவரின் பக்கத்திலே வீசுவான். இவ்வளவு பொருத்தமாகச் சொல்லுகிறீர்களே உங்களுக்கு எப்படித் தெரியுமா என்றால் இலக்கியத்தில் படித்தது! வீசுகின்ற நேரத்தில் அந்த மலர் தன்னுடைய காதலியின் கூந்தலில் ஏறுமா, ஏறாதா என்பதைப்பற்றிக் கூட அவனுக்குக் கவலை இருக்காது. மாலை முழுவதும் அவன எண்ணிக்கொண்டிருப்பான, நாம் போட்ட மலரை அவள் தனனுடைய மலரினும் மெல்லிய கரத்தால் எடுத்து தன்னுடைய கூந்தலிலே செருகியிருப்பாள்; அந்தக் காட்சியை இன்று மாலை ஆறு அல்லது ஏழு மணிக்குப்பார்க்கப்போகின்றோம் என்று. அதைப்போல மாலை வாங்கிவந்த நண்பர்கள் அண்ணாவுடைய கழுத்திலே போடுவோம்; அவர் போட்டுக்கொண்டு நிற்பார்; பார்க்கலாம் என்று எண்ணிக்கொண்டிருந்தார்கள். பெரும்பாலான காதலிகள காதலர்கள் வீசுகின்ற மலரை தாயாருடைய கோபப் பார்வைக்கு பயந்து எடுப்பதில்லை, அதைப்போல நீங்கள் இவ்வளவு மாலைகளைப் போட்டால் நான் எந்த மாலையைத்தான் ரசிப்பது; ஆகையினால் அது எனக்கு அந்த வகையில் பயன்படவில்லை என்றாலும், ஒரு நல்ல காரியத்தை இந்த மாலைகள் செய்தன என்பதாலேதான் நான் மகிழ்ச்சியடைந்தேன்.

நம்முடைய கழகம் எவ்வளவு பரவியிருக்கின்றது என்பதனை காதிருந்தும கேளாதவர்கள், கண்ணிருந்தும் காண மறுப்பவர்கள், கருத்திருந்தும் தெளிவினைத் தேடிக்கொள்ளாதவர்கள், எல்லாம் தெரிந்தும் ஏதும் அறியாதவர்களைப்போல நடிப்பவர்கள். ஆகிய மாற்றுக் கட்சி நண்பர்களுக்கு இவைகளெல்லாம் ஒரு நல்ல அரசியல் பாடத்தைக் காட்ட வல்லது என்பதாலேதான் இவைகளிலே நான் மகிழ்ச்சி கொள்ளுகின்றேன். இது அண்ணாதுரைக்கு; அப்படி என்றால், என்னைவிட அதிக ஆற்றல் படைத்தவர்கள், தி. மு. க.-விற்கு வெளியிலே உள்ளவர்கள், நம்முடைய கழகத்திலே சேர்ந்தால், இதிலே ஈடுபாடு கொண்டால், அவர்களும் இந்தக் கழகத்திற்குக் கைகொடுத்து உதவ ஆரம்பித்தால் நம்முடைய நிலை இன்னமும் எவ்வளவு உயரும் என்ற அந்த ஆசையை இந்த மாலைகள் எனக்குத் தூண்டின. ஆகையினாலே, இந்த அரிய இயக்கத் தொண்டாற்றிய நண்பர்களுக்கெல்லாம் நான் என்னுடைய உளம் கனிந்த நன்றியறிதலை இன்றையதினம் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

நான் சிதம்பரம் வருகின்ற ஒவ்வொரு காலத்திலும், முதலில் ஆறு மணிககோ அல்லது ஏழு மணிக்கோ வருவதாக என்று அறிவிக்கப்பட்டு, நான் அதே நேரத்திலே வரலாம் என்று எண்ணிக்கொண்டு. ஒன்பது மணிக்கு மேலே வருவது வாடிக்கையாகிவிட்டது. இன்றையத் தினமும் அதேபோலத்தான் ஆகிவிட்டது.

ஆனால், நம்முடைய நண்பர் வில்லாளன் அவர்கள், நான் மிக நீண்டநேரம் பேசுவதன் மூலம் இந்தக் குறைபாட்டினை நிறைபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். என்னை நீண்ட நேரம் பேசவேண்டும் என்று கேட்டுக்கொண்ட வரையில், நான், அவரிடத்தில் குற்றம் காணவில்லை. ஆனால், வழக்கறிஞர் வகுப்பில் அவர் படித்துக்கொண்டிருக்கின்றார்.

ஒரு வழக்கறிஞன் நீண்டநேரம் பேசித்தான் ஒரு வழக்கை நிலைநாட்ட முடியும் என்றால், அந்த வழக்கிலே ஏதோ தவறு இருக்கின்றது என்று பொருள்; ஆகையினாலே நீண்டநேரம் பேசினால்தான் நல்ல தீர்ப்புக் கிடைக்கும் என்று சொல்லதக்க அளவுக்கு என்னுடைய வழக்கு இழுக்கு நிறைந்ததல்ல; அப்பழுக்கற்ற வழக்கை நான, நாட்டு மக்களிடம் எடுத்து வைத்துக்கொண்டு வருகின்றேன்; கடந்த இருபது ஆண்டுக் காலமாக, அந்த வழக்கு நாட்டு மக்கள் முன்னால் இருந்து வருகின்றது. நம்முடைய வழக்கிலே அப்பழுக்கு இல்லை என்று நான் சொன்னேன். நம்முடைய வழக்கிற்கு நாம் ஆதாரத்திற்கு காட்டுகின்றவைகள் அத்தனையும் வரலாற்றுத் துணுக்குகளும்

# காமராஜர் பார்க்கவில்லை

இலக்கியச் செறிவு நிறைந்த சம்பவங்களும், கல்வெட்டுகளிலே காணக் கிடைக்கின்ற கருத்து நிறைந்த சம்பவங்களும், இவைகளை யெல்லாம் ஆதாரமாகக் கொண்டுதான் நாம், நம்முடைய வழக்கை நாட்டு மக்கள் மன்றத்தின் முன்னாலே வைத்திருக்கின்றோம்.

> நாம் மிகச் சாமான்யர்கள்; ஆனால், மிகப் பெரிய காரியத்தில் ஈடுபட்டு விட்டோம்; மிகப் பெரியவர்கள் இதைப் பெரிய காரியம் என்று கருதாத காரணத்தால், மிகச் சாமானியர்களான நாம் இந்தப் பெரிய காரியத்திலே ஈடுபட்டு விட்டோம்.

மிகப் பெரியவர்கள் இதை மிகச் சின்ன காரியம் என்று கருதுகின்றார்கள். இந்தக் காரியம் மிகப் பெரியதுஎன்று மிகச்சாமான்யர்களான நாம் கருதுகின்றோம். ஆனால், நாம் மிகச் சாமான்யர்கள் என்பதால் நாமும் இந்தக் காரியத்தில் ஈடுபடாமல் ஒதுங்கிவிட்டால், பிறகு அந்தக் காரியத்தை கவனிப்பதற்குத்தான், ஆள் யார்?

மாமரத்திலே உச்சாணிக் கிளையிலே இருக்கின்ற மாம்பழத்தைப் பறிக்கவேண்டும் என்று வீட்டுக் குரியவன், தோட்டத்துச் சொந்தக்காரன் அதற்கான துறட்டுக் கோலைத் தேட ஆரம்பித்து, அது கிடைக்கவில்லையென்றால், துறட்டுக்கோல் கிடைக்காத காரணத்தால் மாம்பழத்தை விட்டுவிடமாட்டான். துறட்டுக் கோலைத் தேடிக்கொண்டிருக்கும் போதே, அடிக்கொரு தடவை மாம்பழத்தை வந்து பார்ப்பான்; மாமபழத்தைப் பார்த்துப்பார்த்து அதனுடைய ருசியைப்பற்றி எண்ணுவான்; நாவிலே தண்ணீர் ஊறும்; கையெல்லாம் துறடுகளைத் தேடும். கிடைக்காவிட்டாலும், முடிகிறதோ இல்லையோ, ஏறிப் பறித்துவரலாம் என்று மேலே ஏறத்தான் செய்வான். கீழே சில நேரத்தில் வழுக்கி விழத்தான் செய்யும்; சில நேரத்தில்இவனுடையகண்ணுக்கு எட்டிய மாங்கனி கைக்கு எட்டாதால், சரிந்து கீழே விழ முடியும். விழுகின்ற நேரத்தில் கையும் காலும் சிராய்த்துக்கொள்ளக் கூடும்; கீழே விழுந்துவிட்டால் அவனுடைய கை கால்களிலே பலமான அடிபடக் கூடும். அடிபட்டாலும்கூட இரத்தத்தை துடைத்துக்கொண்டே மாம்பழத்தைப் பார்ப்பான். இது சாதாரண மாம்பழத்திற்கு வாலிப உள்ளத்தில் தோன்றக்கூடிய உணர்ச்சி.

நாம் நம்முடைய தாய்த் திருநாட்டை மனக்கண்ணாலே பார்த்துவிட்டோம். பார்க்காமல் இருந்திருந்தாலாவது நமக்கு இந்தத் தொல்லை வந்திருக்காது.

காமராசர் பார்க்கவில்லை; நிம்மதியாக இருக்கின்றார்.

பக்தவச்சலம் பார்த்தாலும் பார்த்ததாகக் கூற மறுக்கின்றார்; ஆகையால், நிம்மதியாக இருக்கின்றார்.

ஆனால், இந்தப் பொல்லாத புலவர்களும், பொல்லாத பேராசிரியர்களும் பூகோளத்தையும் வரலாற்றையும் எழுதி, தமிழ் இலக்கியத்தையும் வேறு எழுதி அதைப் படிக்க மறுத்த தமிழர்களுக்கு இலக்கியச்சுவையையும் வேறு ஊட்டி, இதைப் படியுங்கள் அதைப் படியுங்கள் என்று சொல்லி, அகத்திலே பார், புறத்திலேபார் என்று சொல்லி, கலித் தொகையிலே பார், என்று சொல்லி சிலப்பதிகாரத்தைப் படி, ஜீவக சிந்தாமணியைப் படி என்று சொல்லி, மனோன்மணியத்தைப் படி என்று சொல்லி, சேஷ ஐயங்கார் எழுதிய திராவிடநாட்டைப் படி என்று சொல்லி, டி. ஆர். ராமசந்திர திட்சிதர் எழுதிய தென் இந்திய வரலாற்றைப் படி என்று சொல்லி, சிக்கா எழுதிய தென் இந்திய வரலாற்றைப் படி என்று சொல்லி இந்தத் தொல்லை எல்லாம் நமக்குக் கொடுத்து அவைகளையெல்லாம் படித்ததாலே தாய்த் திருநாட்டை மனக்கண்முன்னாலே பார்த்துவிட்டோம். பார்த்துவிட்டதையார் விட்டுவிடுவான்? பெற முயற்சிக்கின்றோம்.

பெற முயற்சிப்பதற்கேற்ற ஆற்றல் நம்மிடம் இல்லை. ஆனால் அந்த ஆற்றலைப் பெறுவதற்கான முயற்சியை எடுத்துக்கொள்ளுகின்றோம்.

அந்த ஆற்றல் என் ஒருவனிடத்தில் இல்லைஎன்றாலும், வில்லாளனைத் துணைக்கழைக்கின்றேன். எங்கள் இருவரால் முடியாவிட்டால் மதியழகனை அழைக்கின்றோம். மூவரால் முடியாவிட்டால் நடராசனை அழைக்கின்றோம். நடராசனால் முடியாவிட்டால் நாவலர் நெடுஞ்செழியனை அழைக்கின்றோம். கூடியிருக்கின்ற நாங்கள் அத்தனைபேரும் முயற்சித்தாலும் முடியாவிட்டால் உங்களை அழைக்கினறோம. நீங்கள் இலட்சக் கணக்கில் கூடுகின்றீர்கள்.

தாய்த்திருநாட்டை மனக்கண்ணாலே பார்க்கின்றோம். மனக்கண்ணாலே பார்ப்பதற்கு காரணம் வெறும் கற்பனையல்ல-நம்முடைய முன்னோர்கள் எழுதிவைத்த ஏடுகள்; அந்த ஏடுகளைப் படித்த குற்றத்தாலே, நாம் மனக்கண்ணாலே பார்த்துவிட்டோம்.

பாரதிதாசன் அவர்கள் கவிதையிலே ஓர் இடத்தில் சொல்லியிருப்பதைப்போல் "கண் படைத்த குற்றத்தால் உன்னைக் கண்டேன்; கார் இருளைக் கிழித்துக் கொண்டு வருகின்ற மின்னலைப் போல் உன் அழகைக் கண்டேன்" என்று மங்கையைப்பற்றிப் பாடி இருப்பதைப்போல், அறியாதிருந்த நமக்கு தாய்த்திருநாட்டை வரலாறு காட்டிற்று. பூகோளம் அதனுடைய எல்லைகளை எடுத்துச் சொல்லிற்று; இலக்கியம் அதனுடைய எழிலை நமக்கு எடுத்து ஊட்டிற்று; இன்றைய அரசியல் நம்முடைய கேவலத் தன்மையை நினைவூட்டுகின்றது. இதற்குப் பிறகு என்ன செய்ய முடியும்? அதைப் பெறுவதற்கு முயற்சிக்கின்றோம்.

அதைப் பெறுவதற்கு எடுத்துக் கொள்ளுகின்ற முயற்சியிலே பல்வேறு கட்டங்கள் இருக்கின்றன. அந்தக் கட்டங்களிலே ஒன்றுதான் தி. மு. க. சட்டசபை சென்றிருப்பது. தி. மு. க. சட்டசபைசபைக்குள்ளே நுழைய வேண்டும் என்று சொன்ன நேரத்தில் பலர், பற்பலர், புல்

# பொல்லாத புலவர்களும்....

வேறு மாதிரியான கருத்துக் கொண்டவர்கள், நல்லவர்கள், நல்லவர் அல்லாதவர்கள், நல்லவர்களாக இருந்து தீரவேண்டிய நிலையில் இருந்தாலும் பொல்லாதவர்களாகத் தங்களை மாற்றிக் கொண்டவர்கள், நம்மை நடத்திச் செல்ல வேண்டியவர்கள், நம்மை நடத்திச் சென்றவர்கள், நம்மை நடத்திச் செல்ல ஆற்றல் படைத்தவர்கள், நம்மை நடத்திச் செல்ல மறுப்பவர்கள், நாம் நடந்து செல்லும் பாதையே தவறு என்று பாதையோரத்திலே இருந்து சொல்லுபவர்கள், எல்லோரையும் சேர்த்துச் சொல்லுகின்றேன்—பலதிறப்பட்டவர்கள், பற்பலர், நாம் சட்டசபைக்குள் சென்றால் திராவிடநாட்டுப் பிரிவினை என்பது பகற்கனவாகிவிடும், முயற்கொம்பாகிப்போகும். அதனை பெறுவதற்குச் சட்டசபை ஏற்ற இடம் அல்ல என்று அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். சட்டசபைக்கு நாம் செல்லவேண்டும் என்று வலியுறுத்திய தி. மு. க. உங்களிடத்திலே எடுத்துச் சொல்லிற்று — உங்களைப்போல கூடிய பல்லாயிரக்கணக்கான மக்களிடத்திலே எடுத்துச் சொல்லிற்று—எல்லா ஊர்களிலும் கூடிய மாமன்றங்களில் எடுத்துச் சொல்லிற்று — சட்ட மன்றம் போவது என்பது திராவிடநாட்டுப்பிரிவினைக்காக எடுத்துக்கொள்ளும் பல்வேறு முயற்சிகளில் அது ஒன்று; பல்வேறு கட்டங்களிலே அது ஒன்று; பல்வேறு முறைகளிலே அது ஒன்று என்பதனை நாம் வலியுறுத்தினோம். அதே முறையிலே சட்டசபையிலே உங்களுடையபோராதரவைப் பெற்றுப் பதினைந்து தோழர்கள் சென்னை சட்டசபைக்கும் இரண்டு தோழர்கள் டில்லி பாராளு மன்றத்திற்கும் இன்றைய தினம் சென்றிருப்பதை நீங்கள் களிப்போடு காணுகின்றீர்கள். நீங்கள் களிப்போடு காணுகின்ற அந்தக்காட்சியைக்கண்ட மற்றவர்கள் திராவிட நாடு பெறுவதற்கு அதுவா வழி? திராவிட நாடு பெறுவதற்கு அதுவா இடம்? என்று நம்மைக் கேட்டவர்கள் திராவிட நாடு பெறுவதற்கான வழியிலே செல்லுகின்றார்களா? என்று பார்த்தால், அவர்கள் இன்று சென்ற வழியில் மறுநாள் செல்வதில்லை; நேற்று சென்ற வழியில் இன்றைய தினம் செல்வதாக இல்லை; இன்று செல்லுகின்ற வழியில் நாளைக்குச் செல்வார் என்று சொல்லுவதற்கு நியதி இல்லை; நிலை இல்லை. செல்லுகின்ற நேரத்தில் தங்களை எத்தனை பேர் பின் தொடர்ந்து வருகின்றார்களென்று அவர்கள் திரும்பிப் பார்ப்பதாகக் கூடத் தெரியவில்லை. தோன்றுகின்ற வழியெல்லாம் செல்லுகின்றார்கள். வழி கிடைக்காவிட்டால் வழி போடுவேன் என்கின்றார்கள். வழியே இல்லாவிட்டால் என்ன, நான் நடப்பதெல்லாம் வழிதான் என்று சொல்லுவார்கள். ஏன்? வழி நான் இரண்டும் வேறு வேறு அல்ல; அன்பு வேறு, சிவன் வேறு என்பதல்ல; அதைப்போல் நான் வேறு, வழி வேறு என்பதல்ல, நானே வழி என்கின்றார்கள்.

அவர்கள் எடுத்துக்கொண்டிருக்கின்ற முயற்சிகள் உண்மையிலேயே திராவிடத்திற்கு உறு துணையாக அமையுமானால், அவர்களிடத்திலே இன்றைய தினம் அமர்ந்திருக்கின்ற அரிய வாய்ப்பு எனக்கு இல்லை என்றாலும், அவர்கள் இருக்கின்ற திக்கு நோக்கி நான் தண்டனிடுவேன். ஆனால், அவர்கள் செல்லுகின்ற பாதையல்ல தி. மு. க. செல்லுகின்ற பாதை. திராவிடத்தைக் காணுகின்ற பாதை என்பதனை இன்றையதினம் நான் சொன்னால் தி. மு.க.சார்பில் நான் பேசுகின்றேன், ஆகையினால், சொன்னேன் என்று நீங்கள் கருதுவீர்கள். சட்டசபைக்குள்ளே நாங்கள் சென்று அமர்ந்தவுடன் பதினைந்து தோழர்களும் சட்டசபையிலே பேசுகின்ற ஒவ்வொருநேரத்திலும் நீங்கள் கூர்ந்து கவனித்தால் எதிர்க்கட்சியிலே உள்ளவர்கள், ஆளும் கட்சியைச் சேர்ந்த காங்கிரஸ்காரர்கள் என்ன சொல்லி எங்களைக் கண்டிக்கின்றார்கள்? அண்ணாதுரையோ அவனுடைய கூட்டத்தாரோ தருகின்ற புள்ளி விவரம் தவறு என்று கண்டிக்கின்ற அமைச்சர் இருக்கின்றாரா என்றால் இல்லை.

அவர்கள் கூறுகின்ற காரணங்கள் உப்புக்கும் உதவாதன என்று கூறி உதறித் தள்ளுகின்றார்களா? என்றால் அதுவும் இல்லை. நிதி அமைச்சர் சுப்பிரமணியம் மிகத் தெளிவாகச் சொன்னார். அவர்கள் எதற்கெடுத்தாலும் வடக்கு தெற்கு என்கின்றார்கள். எதற்கெடுத்தாலும் நாட்டுப் பிரிவினைக் கண்ணோட்டத்துடன் பார்க்கின்றார்கள், எதைப் பற்றிப் பேசச் சொன்னாலும் அப்படித்தான் அவர்கள் கண்ணோட்டம் வைத்துப் பார்க்கின்றார்கள் என்று நிதி அமைச்சர் சுப்பிரமணியம் சொன்னார். அதிலிருந்து நீங்கள் தெரிந்துகொள்ளக்கூடிய கருத்து என்ன? பதினைந்து பேர் சட்டசபைக்குச் சென்றவர்கள் எதற்

விரைவில் ஆரம்பமாகும்
தோழர் இராதாமணாளன் தீட்டிய
'பாண்டியன் திருமேனி'
உள்ளம் தொடும் தொடர் கதை!

# கொள்கையை என்றும் விடோம்!

காக நாங்கள் உருவாகியிருக்கின்றோமோ எதற்காக இலட்சக் கணக்கானவர்கள் தி. மு. க.-வில் இன்றையதினம் ஈடுபாடு கொண்டிருக்கின்றார்களோ அந்த மூலாதார நம்பிக்கை, அதனுடைய உயிரோட்டம் படைத்த திட்டமாகிய திராவிட நாடு பிரிவினை விஷயத்தைச் சட்டசபையிலே நாங்கள் மறக்கவில்லை. மறக்காதது மட்டுமல்ல ஒருதடவை, சட்டசபையிலே இருக்கின்ற ஒரு அங்கத்தினர் வடக்கு தெற்கு என்று இவர்கள் எல்லாம் ஏதேதோ பேசுகின்றார்கள் என்று எங்களைக் கண்டித்த நேரத்தில் அதற்கு நான் பதில் அளித்துவிட்டு, கொஞ்சம் என்னுடைய பாணியை மட்டமாக்கித்தான் பதிலளித்தேன்; வருந்துகின்றேன். ஏனென்றால், அவ்வளவு கீழே இறங்கினதால்தான் அவர்களைச் சந்திக்க முடிந்தது; அவர்கள் மகா மட்டத்திலே இருந்தார்கள். ஆகையால் ஓரளவுக்குக் கீழே இறங்கிவந்து அவர்களைச் சந்தித்தேன். சந்தித்துவிட்டு நானே கூட வருத்தப்பட்டேன். இப்படி அவர்களுடைய மட்டத்திற்கு நாமும் இறங்கவேண்டும் என்று இறங்க ஆரம்பித்துவிட்டால் பிறகு உயர்ந்த மட்டத்திற்குப் போக முடியாவிட்டால் என்ன செய்வது என்று உண்மையிலேயே வருத்தப்பட்டேன்.

அந்த வருத்தத்தோடு நான் உட்கார்ந்த நேரத்தில், எதிர்ப்புரத்திலே இருந்த முதலமைச்சர் காமராசர் உட்கார்ந்து கொண்டே என்னிடத்திலே சொன்னார் உங்களுடைய ஆட்கள்தான் எதற்கெடுத்தாலும் வடக்கு தெற்கு என்று பேசுகின்றார்கள். அவர்கள் எதற்கெடுத்தாலும் வடக்கு தெற்கு என்று பேசினால் எங்கள் ஆட்கள் சும்மாயிருப்பார்களா என்று கேட்டார். இது சாதாரணமாகக் கிள்ளையிலே இருக்கின்ற மிராசுதாரன், மாயவரத்திலே இருக்கின்ற மிட்டாதாரன், தஞ்சையிலே இருக்கின்ற ஜமீந்தாரன் இப்படிப்பட்டவர்கள் பேசக் கூடிய பாணி. முதலமைச்சர் அப்படிப் பேசுவார் என்று எனக்குத் தெரியாது. ஆகவே, நம்முடைய முதலமைச்சர் அப்படி சொன்னவுடன் நான் ஒரு கணம் திகைத்தேன். ஏன் என்றால் உங்கள் ஆள் என்னுடைய ஆள் என்று சொன்ன உடனே இந்த, ஆளைக்காட்டிப் பேசுவது என்பது இரண்டு வகையிலே சொல்லுவார்கள். ஒன்று எடுபிடிகளை ஆள் என்று சொல்லுவார்கள். மற்றொன்று உங்கள் பகுதியிலே நன்றாகத்தெரியும்: அடி ஆட்களை ஆள் என்பார்கள். இப்படிக் காமராசர் அவர்கள் உங்கள் ஆள் என் ஆள் என்று சொன்ன உடனே நான் கொஞ்சம் வருத்தப்பட்டு அவரிடத்திலே சொன்னேன் தி. மு. க-வினர், பேசினால், வடக்கு தெற்கு என்பதற்கு ஏதையாவது பிரச்சினையை விளக்கப் பேசியிருப்பார்கள்; ஏதாவது, காரணத்தைக் காட்டிப் பேசியிருப்பார்கள்; பொருத்தமற்ற முறையிலே பேசியிருக்கமாட்டார்கள் என்று சொல்லி, உங்கள் பக்கத்திலே இருந்து பேசுபவர்கள் அப்படியல்ல எதற்கெடுத்தாலும் எதையாவது கண்டிக்கவேண்டும், அருவருப்பைக் காட்டவேண்டும் கோபத்தைக் கக்கவேண்டும் என்ற முறையிலே பேசுகின்றார்கள் என்று. முறை இருக்கட்டும் நீங்கள் வடக்கு தெற்கு என்றால் எங்கள் ஆட்கள் வடக்கு தெற்கு என்றுதான் பேசுவார்கள் என்று சொன்னார். நான் சொன்னேன் தாராளமாகப்பேசிக்கொள்ளட்டும் நான் வேண்டாம் என்று சொல்லவில்லை அவர்கள் எவ்வளவுதான் சொன்னாலும் தாங்கிக்கொள்ளுகின்ற உள்ள உரத்தோடுதான் வந்திருக்கின்றோம் என்று. நான் வருத்தப்படுகின்றேன் என்று எண்ணிக்கொண்டு காமராசர் சொன்னார். செத்துப் போனவர்களைப்பற்றிப்பேசச்சொன்னால்கூட உங்கள் ஆட்கள் வடக்கு தெற்கு என்று பேசுகின்றார்களே. என்றார். அப்போதுதான் என்னுடைய நினைவிற்கு வந்தது, அன்பழகன் அவர்கள், குமாரசாமி ராஜா அவர்கள் காலமானதற்கு அனுதாபத்தீர்மானம் நிறைவேற்றிய நேரத்தில், பேசியபோது குமாரசாமி ராஜா அவர்களுடைய பண்புகளையெல்லாம் சொல்லிவிட்டு "மிக நல்லவர், கடைசி காலத்தில் வடநாட்டு ஆதிக்கத்தையுணர்ந்து நாட்டு மக்களிடத்து அதனை அறிவித்தார். இன்னும் கொஞ்சம் காலம் உயிருடன் இருந்திருந்தால் திராவிடத்திற்கு நன்றாக இருந்திருக்கும். காலத்தினுடைய கொடுமையால் இறந்துவிட்டார்" என்று அவர் சொன்னார்.

இது காமராசருடைய உள்ளத்தைக் குத்திக்கொண்டே இருந்தது என்பது, எனக்கு அன்றைய தினம்தான் தெரிந்தது. செத்துப் போனவர்களைப் பற்றிப் பேசச் சொன்னால்கூட வடக்கு தெற்கு என்று பேசுகின்றார்கள் ஆகையினால்தான் எங்கள் ஆள் அப்படி பேசுகின்றார்கள் என்றார்.

இதிலே இருந்து உங்களை நான் காமராசரைபபற்றி ஆராயச் சொல்லவில்லை. திராவிடநாடு பிரிவினையை நாங்கள் விட்டுவிட்டோமா என்பதை எண்ணிப்பார்க்கச் சொல்லுகின்றேன். எந்த நேரத்திலும் விட்டதில்லை; எந்த நேரத்திலும் விடமாட்டோம்; எந்த நேரத்திலும் விடுகின்றவர்கள் நாங்கள் அல்ல. அமைச்சர்கள் தங்களுடைய புன்னகையைக் காட்டினாலும் சரி, அல்லது பொறிபறக்க பேசினாலும் சரி, தங்கள் கரத்திலே இருக்கின்ற அதிகாரத்தைக் கொண்டு எங்களுக்கு ஏதாவது இலாப வார்த்தை சொன்னாலும் சரி அல்லது தங்கள் கையிலே இருக்கின்ற அடக்கு முறையைக் காட்டி எங்களை பயமுறுத்தினாலும் சரி, நாங்கள் எந்தப் பிரச்சனைக்குக் கட்டுப்பட்டுப் போயிருக்கின்றோமோ அந்தத் திராவிடநாட்டுப் பிரிவினை என்ற பிரச்சனைக்கு நாங்கள் என்றையதினமும் அதை விட்டு விலகமாட்டோம். அதையும் சட்டசபையில் தெளிவாக நான் சொன்னேன். நான் சட்டசபைக்கு வந்திருப்பது உங்களுக்கு லாலி பாடுவதற்கு அல்ல என்றும் தெளிவாக நான் சொன்னேன்.

சட்டசபைக்குச் சென்றால் திராவிடநாடு பிரிவினை கெட்டுவிடும் என்று சிலர் — சிலர்,

# சட்டசபைக்கெனத் தனிப்பேச்சுண்டோ?

சிலர் என்று மறைத்துத்தான் பேசுவானேன—என்னுடைய மதிப்பிற்குரிய தலைவர், பெரியார் இராமசாமி அடிக்கடி சொல்லிக்கொண்டு வருகின்றாரே, அவருக்கும் அவரைச் சார்ந்த நண்பர்களுக்கும், நான் இன்றையதினம் கவனமூட்டுகின்றேன்; அந்தப் பிரச்சினையை எந்த நேரத்திலும் விட்டதாக எங்களுடைய நிகழ்ச்சிகள், நடவடிக்கைகள், பேச்சுகள் இதுவரையில் காட்டவில்லை. காட்டாதது மட்டுமல்ல, நாங்கள் எடுத்துப் பேசுவதை நிதியமைச்சர் சுப்பிரமணியம் எங்கள்பேரிலே மூன்று குற்றச்சாட்டுகளை சாட்டுகின்றார்.

ஒன்று அவர் சொன்னது, அண்ணாதுரையும் அவருடைய கூட்டத்தாரும் தி. மு. க. - வினர் சட்டசபையிலே பேசுகின்றார்கள். ஆனால், மேடைப் பேச்சு போலத்தான் பேசுகின்றார்களே தவிர பாராளுமன்ற முறையில் பேசுவது இல்லை என்று. நான் ஒருகணம் ஆச்சரியத்தாலே திகைத்துப் போனேன். பேச்சிலே பாராளுமன்றபேச்சு என்று ஒன்று உண்டு மேடைப் பேச்சு என்று மற்றொன்று உண்டு என்று நிதி அமைச்சர் சொல்லிய பிறகுதான் எனக்கு தெரியவந்தது. ஏனென்றால், நான் அறிந்தவரையில் அரசியல் வரலாற்றில் யார் யார் மேடைப் பேச்சில் வல்லவர்களோ அவர்களே பாராளுமன்றப் பேச்சிலும் வல்லவர்களாக இருப்பதாக அரசியல் வரலாறு நமக்குக் காட்டுகின்றது. காலம்சென்ற சத்தியமூர்த்தி ஐயர் மேடையிலும் கர்ஜிப்பார் சட்டசபையிலும் அவருடைய பேச்சைக் கேட்டவர்கள் ஆச்சரியத்தால் வாய்பிளந்து நின்றார்கள். சர். ஏ. ராமசாமி முதலியார் மேடையிலும்அழகாகப் பேசுவார் பாராளு மன்றத்திலும் அழகாகப்பேசிக்கொண்டிருந்தார். சண்முகம் செட்டியார் மேடையிலும் அழகாகப் பேசுவார்; பாராளு மன்றத்திலும் அழகாகப் பேசிக்கொண்டிருந்தார். மகாகனம் சாஸ்திரியார் மேடையிலேயும் அழகாகப் பேசுவார், டில்லியிலே அவர் அமர்ந்திருந்த நேரத்திலும் அழகாகப் பேசிகொண்டு வந்தார். சர். சி. பி. ராமசாமி ஐயர் மேடையிலும் நன்றாகப் பேசுவார்; பாராளுமன்றத்திலும் நன்றாகப் பேசுவார். ஜவர்லால் நேருவின் தகப்பனார் மோதிலால் நேரு மேடையிலும் நன்றாக பேசுவார்; பாராளுமன்றத்திலும் நன்றாக பேசுவார். இரண்டு இடத்திலும் அழகாக பேசாதவர்கள் சிலபேர் இருக்கத்தான் செய்கின்றார்கள். அதற்கு நான் பொறுப்பாளியல்ல! அவர்களிலே சில பேர் மேடையிலே அழகாக பேசினால் சட்டசபையில் அழகாக பேச முடியாது என்று எடுத்துச் சொன்னால் நான் கொடுத்த இந்த நீண்ட பட்டியல் என்ன பொருளைத் தருகின்றது.

அப்படித்தான் பாராளுமன்றப் பேச்சு என்று ஒன்று ஏதாவது தனியாக இருக்கின்றதா? என்பதை நான் ஒரு குருவை சீடன் கவனித்துப் பார்ப்பதைப்போல நிதி அமைச்சர் சுபபிரமணியம் அவர்கள் பேசியதை மிக கூர்ந்து கவனித்துப் பார்த்தேன், கொஞ்சம் தெரிந்துகொள்ளலாம் என்றுமதான்! அவர் எப்படிப் பேசுகின்றார் பாராளுமன்றப் பேச்சு என்றால், நான் அதை உங்களிடத்திலே இப்போது பேசிக் காட்டினால், நான் ஏதோ அவரை கேலி செய்கின்றேன் என்று அவருடைய நண்பர்கள் கருதவேண்டாம். நீங்களும அவரும எவ்வளவு நண்பர்களோ அதைவிட நெருக்கமான நண்பர்கள் நானும் அவரும் ஆகையினால், நான் அவரை கேலிசெய்வதாக கருதிக் கொள்ளத்தேவையில்லை. பாராளுமன்றப் பேச்சு என்று அவர்கள் எதை எண்ணிக்கொண்டிருக்கின்றார்கள் எப்படி அவர்கள் பேசுகின்றார்கள் என்றால், பட்ஜட்டைப்பற்றி கனம் சுபபிரமணியம் அவர்கள் பேசிகொண்டிருந்தார்.

நீர்ப் பாசனத் திட்டத்திற்கு 55-லட்சம் ரூபாய் ஒதுக்கி வைத்திருப்பதாக வைத்துக்கொள்ளுங்கள் அந்தப் புள்ளி விவரம் சரியாக இருக்காது, ஆகையினாலேதான் வைத்துக்கொள்ளுங்கள் என்று சொன்னேன். 55-லட்சம் ரூபாய் சிறிய' நீர்ப்பாசன திட்டத்திற்கு ஒதுக்கியிருப்பதை மேடையிலே பேசுவதானால், வறண்டு கிடக்கின்ற இந்த பூமிக்கு, நீர் பாசனங்கள் தேவை, நீர்பாசனம் இரண்டு வகை. ஒன்று அணைக்கட்டு கட்டுவது, மற்றொன்று சிறு நீர்பாசனம். அந்தசிறிய நீர்பாசனத்திற்கு 55-லட்சம் ரூபாய் ஒதுக்கி வைத்திருக்கின்றோம என்று சொன்னால் மேடைப் பேச்சு என்று நிதி அமைச்சர் கருதிக்கொண்டு, பாராளுமன்றப் பேச்சு என்று எப்படிப் பேசினார் என்றால், சிறு நீர்பாசன திட்டங்களுக்கு என்றார் ஒருகண நேரம் சபை நிசபதமாக இருந்தது. எல்லோரையும் ஒரு தடவை பார்த்தார். இந்த மாஞ் செடி முளைக்க வைக்கின்றவன கொட்டையைக் காட்டி, கூடையைக் காட்டி பார்த்துக்கொளளுங்கள் பார்த்துக் கொள்ளுங்கள என்று சொல்லி அதை உள்ளே வைத்துக் கூடையை மூடி ஜனங்களை யெல்லாம ஒருகணம பார்ப்பான். ஜனங்கள் எல்லாம கூடையைப் பார்ப்பார்கள். அதைப் போல நிதி அமைச்சர் சுப்பிரமணியம், சிறிய நீர்ப்பாசன திடடத்திற்கு என்று சொல்லிவிட்டு சபையைப் பார்த்தார். சபையினர் அவரைப் பார்த்தார்கள். சிறிய நீர்பாசன திட்டங்களுக்கு நாங்

## வருந்துகிறோம்

நமது நண்பர் தோழர் கே. ஏ. மதியழகன் அவர்களது மூத்த அண்ணனும் கணியூர் தொ. அ. அருணாசலனார் அவர்களின் திருச்செல்வருமான கே. ஏ. அருணாசலம் அவர்கள் கடந்த கிழமை இயற்கை யெய்திய செய்தி கேட்டு, மிக மிக வருந்துகிறோம். அறிவுப் பணிக்குத் தம்மை ஈடுபடுத்திக்கொண்டுள்ள சிறந்ததோர் குடும்பத்தில், அன்பும் பண்பும் கொண்டு விளங்கிய நல்லவர் அவர். இத்துணை விரைவில் சாவு நம்மை விட்டுப் பிரிக்கும் என்று சிறிதும் எதிர்பார்த்தோமில்லை. இது, நண்பர் மதிக்கும் அவரது சகோதரர்களுக்கும், தாய் தந்தையருக்கும் அளவிலாத துயரினையே அளிக்கும். எனினும் என் செய்வது? வாழ்வின் சிக்கல்களையும் விசித்திரங்களையும் உணர்ந்த நண்பருக்கும் குடும்பத்தாருக்கும், அவர்களுடைய துயரத்தில் நாமும் பங்கு கொள்வதைத் தவிர, என்ன ஆறுதல் கூற இயலும்?

# 'இப்போதைக்கு' என்றால்....!!

கள் ஒதுக்கி வைத்திருக்கின்ற தொகை...........கொஞ்ச நேரம் நிறுத்தினர்...என்ன தொகையோ ...இரண்டு கோடியோ?...மூன்று கோடியோ?......நாலு கோடியோ என்ற ஆவலைக் கிளப்புகிறார்; அந்த ஆவல் கிளம்பிய பிறகு சொல்ல வேண்டும். அதுதான் பாராளுமன்ற முறை என்று அவர் எண்ணிக்கொண்டு நாங்கள் அதற்காக ஒதுக்கிவைத்திருப்பது ஐம்பத்து ஐந்து லட்ச ரூபாய் என்று நிதானமாக சொன்னர் இதை அவர் பாராளுமன்ற முறை என்றுகருதிக்கொண்டிருக்கின்றார். ஒரு சமயம் பாராளுமன்ற பேச்சு முறையாகக்கூட இருக்கலாம. ஆனல், அவர் பேசுவதற்கு முன்னலே அது அச்சடித்து எங்கள கையிலே கொடுக்கபபட்டுவிட்டது. ஆகையால் 55-லட்சமா? 65-லட்சமா? என்ற சந்தேகம் யாருக்கும இல்லை. இந்த 55-லட்சத்தைச் சொல்ல நிதி அமைச்சர் கூச்சப்படுகின்றார்? ரொம்பக் குறைவு ஆகையினல்தான் வெட்கப்படுகின்றார் என்று சபையினர் எண்ணிககொண்டார்களே தவிர, இவருடைய பாராளுமன்றப்பேச்சு விரும்பிய பலனைத் தரவில்லை.

இது ஒரு குற்றச்சாட்டு! எங்களைப்பற்றி அவர் சொல்வது:

மற்றென்று அவர் சொன்னர், அண்ணாத்துரையும் அவருடைய கட்சிக்காரர்களும் ஏதற்கெடுத்தாலும் நாட்டுப் பிரிவினை நாட்டுப் பிரிவினை என்று பேசுகின்றார்கள் அவர் சொன்னது அத்தனையும சட்டமன்ற புத்தகத்தில், அச்சாகியிருக்கின்றது; புத்தகம் கிடைத்ததும் நீங்கள் பார்க்கலாம். சட்டமன்ற புத்தகத்திலே இவை இருக்கும் என்ற தைரியத்திலேதான் உங்களிடத்திலே, நான் சொல்லுகின்றேன்.

அன்றையத்தினம் அவர் சொன்னது, நாட்டுப் பிரிவினை நாசத்தைத் தரும். நாட்டுப் பிரிவினையை நாங்கள் ஏற்றுக்கொள்ளமாட்டோம். வாசகங்களை, நீங்கள் ஒவ்வொன்ருக கவனித்துவரவேண்டும். கவனிக்கின்றபோது ஒருவன் முதல் வாசல்படிக்கு வந்து, 2-வது வாசல்படிக்கு வந்து கூடத்துக்கு வருவதைப்போல் ஒவ்வொரு வாசலும் உங்களை ஒவ்வொரு இடத்துக்கு அழைத்துக்கொண்டு போகும்; நாட்டுப் பிரிவினை நாசத்தைத் தரும்; நாட்டுப் பிரிவினையை நாங்கள் ஏற்றுக்கொள்ளமாட்டோம்; நாடு இன்னொரு பிரிவினையை ஏற்றுக்கொள்ளாது. இந்த 3-வாசகங்களையும் அவர் அடுக்கிய தன் அர்த்தம், என்னவென்றால், நாட்டுப் பிரிவினை நாசம் தரும்; எதை நாசமாக்கும், விளக்கினர் இல்லை.

யாருக்கு அது நாசம். எடுத்துச் சொல்லவில்லை.

நாட்டுப் பிரிவினை நாசம் தரும்; நிச்சயமாகத் தரும். ஆதிக்கக்காரர்களுக்கு, அவர்களின் சுய நலத்துக்கு நாசம் தரத்தான் செய்யும். அதை யாரும் இல்லை என்று சொல்லவில்லை.

ஆனல், நாட்டுப் பிரிவினையைக் கேட்பவர்களுக்கு நாட்டுப் பிரிவினை நாசம் தருமா என்றால் அதை அவர் விளக்கவில்லை. இந்த மருந்தைச் சாப்பிட்டால் உள்ளே இருக்கின்ற கிருமிகள் எல்லாம் செத்துப் போகும் என்று சொல்லி டாக்டர் ஒரு மருந்தைக் கொடுத்தால் சாவப்போவது கிருமியே தவிர நோயாளியல்ல என்ற தைரியத்திலே மருந்தைச் சாப்பிட வேண்டும். அதைப்போல கிருமியைக் கொல்லுமா அந்த மருந்து; அப்படியானல், என்னையே கொன்றுவிட்டால் என்ன செய்வது என்று வைத்தியரிடத்திலே சொன்னல், அவன் கடைசிவரையில் நோயாளியாகவே இருக்க வேண்டியதுதான். அதைப்போல நாட்டுப் பிரிவினை நாசம் தரும் என்று சொன்ன நிதிஅமைச்சர் அவர்கள் நாட்டுப் பிரிவினையாரை நாசம்செய்யும், யாருக்கு நாசத்தை உண்டாக்கும் என்று விளக்கவில்லை. நாட்டுப் பிரிவினையை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை; இதுவும் நமக்குப் புதிதல்ல ஆகையினல்தான் அவரை ஏற்றுக்கொள்ளும்படி கெஞ்சிக் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

மூன்ருவது சொன்னதுதான் அவருடைய மனதிலே தோன்றுகின்ற அரசியல் அலையை நமக்குக் காட்டுகின்றது. அந்த அரசியல் அலை தோன்றியதற்குக் காரணம் தி. மு. க. சட்டசபையில் இடம் பெற்றதுதான் என்று நான் பெருமையோடு சொல்லிக்கொள்ளுவேன்.

அந்த மூன்ருவது வாசகம் இன்னொரு பிரிவினைக்கு நாடு இப்போது தயாராகயில்லை. இன்னொரு பிரிவினைக்கு என்பதிலே உள்ள பொருளையும், இப்போதைக்கு என்பதிலே உள்ள பொருளையும்,—தமிழ் நல்ல வளமான சொல். காரணம் இல்லாமல் ஒரு சொல்லும் தமிழிலே இருக்காது. அப்படி காரணமில்லாமல் ஒரு சொல் இருந்தால் அதை தமிழ்ப் புலவர்கள் ஒரு தனி அட்டவணையில் அசை என்று தள்ளியிருக்கின்றார்கள்,--ஆகையினலே இப்போதைக்கு என்று நிதி அமைச்சர் சொன்னதற்கும் இன்னொரு பிரிவினைக்கு என்று சொன்னதற்கும் ஆழ்ந்த அரசியல் கருத்து இருக்கின்றது. பாக்கிஸ்தானத்தை பிரித்துக் கொடுத்துவிட்டார்கள். அதனலே நாங்கள் மெத்த சங்கடப்படுகின்றோம் ஆகையினலே இன்னொரு பிரிவினைக்கு ஒத்துக் கொள்ளமாட்டோம். அது அவருடைய அரசியல் அச்சத்தைக் காட்டுகின்றது. மறறுமொன்று இதற்காக அவசரபபட வேண்டாம் அண்ணாதுரை, இப்போதைக்கு ஏற்றுக்கொள்ளாது; இன்னமும் தெளிவுபட அவர் சொன்னர்; நாட்டுப் பிரிவினையை விட்டு

## வருந்துகிறேம்

நமது தோழர் கண்ணதாசன் அவர்களது அன்னையார் சென்ற கிழமை சென்னையில் இயற்கை யெய்தினர்கள். தாயாரின் மறைவு நண்பருக்கும், அவரது குடும்பத்தாருக்கும் தாங்கொணுத் துயரத்தைத் தரும். அவருக்கும், அவருடைய மூத்த அண்ணன் காரைக்குடி கண்ணப்பன் அவர்கட்கும், இன்னொரு அண்ணன் மதராஸ் பிக்சர்ஸ் உரிமையாளர் ஏ. எல். சீனுவாசன் அவர்களுக்கும், குடும்பத்தாருக்கும் நமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேம்.

பதிவு எண் எம். 4642 தொலைபேசி எண் { அலுவலகம் [illegible] இல்லம் [illegible]

# அவசரப்பட்டு பேசியதற்கு என்ன பெயர்!

விடும்படி நான் கேட்டுக்கொள்ளுகின்றேன். விடமுடியாவிட்டால் 10 வருடத்திற்காவது ஒத்திப் போடும்படி நான் கேட்டுக்கொள்ளுகின்றேன். ஆங்கிலத்திலேயே அவர் சொன்னார் "Truce"—ஒரு சமாதான உடன்படிக்கை செய்து கொள்ளுவதைப்போல் நாட்டுப் பிரிவினையை அண்ணாதுரைக் கட்சியார் ஒரு 10 வருஷத்திற்கு ஒத்திவைக்கட்டும். இந்த 10 வருஷத்திலே தமிழ் நாடு வளராவிட்டால்—வளரவில்லை என்று நிரூபிக்கப்பட்டால், அதற்கு வடநாடு தான் காரணம் என்று எனக்குத் தெரிவிக்கப்பட்டால் இவர்களென்ன, நானே வந்திருந்து நாட்டுப் பிரிவினைக்குப் பாடுபடுவேன் என்று நிதி அமைச்சர் சுப்பிரமணியம் பகிரங்கமாக சட்டசபையில், பிரிட்டனிலே கூடுவதைப்போல் நள்ளிரவிலே கூடுகின்ற பாராளுமன்றமல்ல, பிரான்சு நாட்டிலே கூடுவதைப்போல் ஒயின் சாப்பிட்டவர்கள் கூடுகின்ற சட்டசபையில்லல்ல பட்டப்பகலில், பசி வயிற்றைக் கிள்ளுகின்ற நேரத்தில், 12 மணி வேளையில், பகிரங்கமாக சட்டசபையில் சொன்னார், 10-வருடத்திற்கு இதை ஒத்திவைக்க வேண்டும என்று. சட்டசபைக்கு 15 பேரை நீங்கள் அனுப்பாமல் இருந்தால் இந்த வாசகம் நிதியமைச்சர் வாயிலிருந்தும் பிறவாது.

சட்ட மன்ற புத்தகத்திலேயும் ஏறியிருக்காது. அதிலே அவர் ஒரு வாசகம் சொல்லிவிட்டால் என்ன பெரிய லாபம் என்று நீங்கள் கேட்கலாம். 10-வருஷம் சமாதானமாக இருங்கள், நாட்டுப் பிரிவினையை விட்டு வையுங்கள் என்று சொன்னவுடன் வடநாட்டிலே இருக்கின்ற தேசியப் பத்திரிகைள் அத்தனையும் காரசாரமான தலையங்கங்கள் எழுத ஆரம்பித்தன.

ஆங்கில பத்திரிக்கை நடத்துவதால் எனக்கு இந்தப் பத்திரிக்கைகளெல்லாம் வருகின்ற காரணத்தால் நான் படித்தேன்.

இந்த வாசகத்தைப்பற்றிப் பலபேர் இவரைக் கேட்டிருக்கவேண்டும் என்று நான் யூகிக்கின்றேன் அதனாலே அவர் சட்டசபையிலே இருக்கின்ற காங்கிரஸ் சீர்திருத்தக் கமிட்டியைச் சார்ந்த ஒரு நண்பர் — இந்த பேச்சு நடந்த ஒரு வாரம் கழித்து சட்டசபையில் நான் இல்லாத நேரம்பார்த்து —திராவிட நாடு பிரிவினையை ஒரு பத்து வருஷத்திற்கு ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டாரே அப்படி என்றால் திராவிடநாடு என்ற அடிப்படை விஷயத்தை அவர் ஒத்துக்கொள்ளுகின்றாரா என்று கேட்டார். நிதி அமைச்சர் எவ்வளவு வம்பிலே சிக்கிவிட்டார் பாருங்கள். இவர் எங்களுக்குச் சொல்லுகின்றார் பாராளுமன்ற முறையிலே பேசுகின்ற பேச்சு வேறு மேடையிலே பேசுகின்ற பேச்சு வேறு என்ற இவர் எங்களுக்குச் சொல்லுகின்றார் எங்களுக்கு அனுபவம் இல்லை என்று. இவர் அனுபவம் பெற்றவர். ஆச்சாரியாரிடதிலேயே பாடம் கேட்டவர். இவர் அவசரப்பட்டு பேசிய ஒரு வாசகத்தாலே இந்தியாவிலுள்ள பல பத்திரிக்கைகளும் தாக்க ஆரம்பித்து இவரைக காப்பாற்றுகின்ற நோக்கத்தோடு இராமசாமிப்பிள்ளை அந்த அந்தக் கேள்வியைக் கேட்டார். கேள்விக் கேட்டவுடன் சபாநாயகர் இது அன்றைதினம் நடந்தது கேள்விகேட்டால் அன்றே கேட்க வேண்டும். அதற்கு இன்றையதினம் நான் அனுமதிக்கவில்லை என்று கூறி இராமசாமிப் பிள்ளையை உட்காரவைத்துவிட்டார் உட்காரவைத்தாலும் நிதி அமைச்சர் பதில் சொல்ல கடமைப்பட்ட காரணத்தால் எழுந்திருந்து சபாநாயகரைப் பார்த்து இது என்னைப்பற்றிய பிரச்சினையாக இருப்பதாலே நான் பதில் சொல்ல ஆசைப்படுகின்றேன் என்று சொல்லி திராவிடநாட்டுப் பிரிவினையை நான் என்றும் ஆதரித்ததில்லை இன்றும் ஆதரிக்கவில்லை. என்றும் ஆதரிக்கமாட்டேன் வடநாட்டுக்குத் தபால் எழுதிவிட்டார் என்னை சந்தேகிக்காதீர்கள் என்னைப் பார்தது அருவருப்பு அடையாதீகள் இப்படிப்பட்டவன நிதி அமைச்சனாக இருக்கலாமாஎன்று கோபபபடதீர்கள் நான் திராவிட நாட்டை அன்றும் ஆதரிக்கவில்லை; இன்றும் ஆதரிக்கவில்லை என்றும் ஆதரிக்க மாட்டேன் எபபோதும் தங்களுடைய கிழ்ப்படிதலுள்ள ஊழியன் நான் என்று கடிதம் எழுதுவது மாதிரி மூன்று வாசகமும் சொல்லிவிட்டார். சொல்லிவிட்டாரே தவிர அவருககு மீணடும் கவனம் வந்தது 10-வருஷம் என்று சொன்னோமே அதற்கு எதாவது ஒரு விளக்கம் சொல்ல வேண்டுமே என்று எண்ணி 10-வருஷம் நிறுததி வையுங்கள் என்று சொன்னது நாட்டுப் பிரிவினையையல்ல நாச வேலையை (Subversive activities) என்றார் இதனுடைய பொருள் என்ன?

( அடுத்த இதழில் முடியும் )

**HOMELAND**

1—9—1957 தேதிய "ஹோம் லேண்ட்" இதழ் 4—9—1957 புதனன்று இங்கிருந்து அனுப்பப் படும் என்பதை விற்பனையாளர்களுக்கும், வாசகர்களுக்கும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

நிர்வாகி,
'ஹோம் லேண்ட்.'